விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 28 சனிக்கிழமை (12.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 024

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
dishtv
SATS-TECH
சாட்ஸ் ரெக் இன்ஜினியர்ஸ்
இல. 56/15 ஸ்ரான்லி வீதி ஒழுங்கை.
(பழைய தபால் கந்தோர் வீதி.
யாழ்ப்பாணம்.)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-4904)

## அரசியலமைப்பு உருவாக்கத்தில்

# கூட்டமைப்பு பின்வாங்காது

## சுமந்திரன் தெரிவிப்பு



(கொழும்பு) அரசியலமைப்பு உருவாக்க செயற்பாடுகளிலிருந்து இறுதிவரை பின்வாங்கப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை கூடிய அரசியலமைப்பு சபையில் உரையாற்றிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார். (24-ம் பக்.)

## புதிய அரசியலமைப்பு

# பாராளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான இடைக்கால அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக பாராளுமன்றம் நேற்று முற்பகல் அரசியலமைப்பு சபையாகக் கூடியது. 23☛

## அரசுடன் இணையுங்கள்

# கூட்டமைப்புக்கு சம்பிக்க அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அமைச்சர் சம்பிக்க ரணவக்க பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

அரசியலமைப்பு நிர்ணய சபையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு 02☛

## மாகாண மக்களின் தீர்ப்பின் பின்னர்

# பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் மாகாணங்களை இணைக்க முடியும்

## இடைக்கால அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மாகாணத்தில் நடத்தப்படும் பொதுவாக்கெடுப்பின் ஊடான மக்கள் தீர்ப்பின் பின்னர் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் சட்டமூடாக, இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாக பிரகடனப்படுத்த முடியும் என புதிய அரசியலமைப்புக்கான இரண்டாவது இடைக்கால அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான இரண்டாவது இடைக்கால அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஏக்கிய ராஜ்ஜிய அல்லது ஒருமித்த நாடு என்ற ஆட்சிமுறையுடன் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை என்பதையும் வலியுறுத்தி 24☛

## பொங்கலை முன்னிட்டு

### பாடசாலைகளுக்கு திங்கட்கிழமை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் இந்த சிறப்பு விடுமுறைக்கான கட்டளையை கல்வி அமைச்சின் செய 24☛

### நாடு முழுவதும் போதை ஒழிப்பு வாரம் பிரகடனம்

(கொழும்பு)


நாடுமுழுவதும் முதன்முறையாக அனைத்துப் பாடசாலைகளிலும் போதைப்பொருள் ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை போதைப்பொருள் ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி செயலகமும் கல்வி அமைச்சும் 23☛

## பௌத்த மதத்துக்கே முன்னுரிமை

# புதிய அரசியலமைப்பால் நாடு பிளவுபடாது!

## பாராளுமன்றில் பிரதமர் ரணில் உரை



(கொழும்பு) நாட்டை பிளவுபடுத்துவதற்கோ அல்லது பௌத்த மதத்துக்கு உரித்தான பிரதான இடத்தை இல்லாமல் ஆக்குவதற்கான ஏற்பாடுகளோ புதிய அரசியல் அமைப்பில் எந்தவொரு இடத்திலும் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அரசியலமைப்பு நிர்ணய சபை பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கூடியது. இதன்போது அங்கு கருத்து வெளியிடும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

## பாதுகாப்பை உறுதி செய்யக்கோரி

# நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்கள் போராட்டம்



23☛

### அரசமைப்பு தொடர்பில் மகிந்த போலி பிரசாரம்
### ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

புதிய அரசமைப்பு தொடர்பில், மகிந்தவும் அவரது சகாக்களுமே, விகாரை விகாரையாகச் சென்று, போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனரென்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று, புதிய அரசமைப்பு சம்பந்தமான யோசனையை முன் 23☛

# பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை!

## பாராளுமன்றில் சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பை ஏற்க முடியுமா என்பதை மூவின மக்களே தீர்மானிக்க வேண்டிய நிலையில், அரசியலமைப்பிற்கும் தேர்தலுக்கும் தொடர்பில்லை. எனவே பொதுத் தேர்தலொன்றை நடத்துவதற்கான அவசியம் இல்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை கூடிய அரசியலமைப்புச் சபையில் புதிய அரசியலமைப்பு தொடர்பில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பி 23☛

## கூட்டமைப்புக்கு...

அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணையவேண்டும். அமைச்சுப் பதவிகளை பெற்று வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சேவையாற்ற முன்வர வேண்டும்.

எதிர்ப்பு அரசியலைக் கைவிடுத்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களை கட்டியெழுப்ப அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணையவேண்டும்.

கடந்த 50 வருடங்களில் வடக்கு பகுதியில் பெரிதாக எவ்வித தொழிற்சாலையும் உருவாகவில்லை. வேலையில்லாப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை.

அதேவேளை, காலைநிலை மாற்றத்தால் இன்னும் 40ஆண்டுகளில் வடக்கு பகுதி அரைப்பாலைவனமாக மாறக்கூடும். அதை சமாளிப்பதற்குரிய வழிமுறைகள் பற்றியும் ஆராய வேண்டும் என தெரிவித்துள்ளார். (ம-3)

## 31-ம் நாளில் நினைவு கூருகின்றோம்



**திருமதி மனோன்மணி சோமசுந்தரம்**

யா/வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் திரு.சோ.இராமநாதன் அவர்களுடைய அன்புத் தாயார் அமரர் மனோன்மணி சோமசுந்தரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்

**கோட்டக்கல்வி அலுவலர்,**
**அதிபர் சங்கம்,**
**தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்**

(7120)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## Faculty of Management Studies Commerce, University of Jaffna, Sri Lanka

ACADEMIC YEAR 2017 / 2018
ORIENTATION PROGRAMME FOR FRESHERS

The Orientation programme for the Freshers' of the Faculty of Management Studies and Commerce will commence on 28th of January 2019, at 08.30 am, in the Kailasapathy Auditorium of the University of Jaffna.

The programme is scheduled to be held from 28th of January 2019 to 01st of February 2019. Please find further details from our website, **http://www.maco.jfn.ac.lk/.**

**Registrar**

(மி-5121)

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**கலைமாணி பட்டப்படிப்பு (வெளிவாரி) - 2016 / 2017**
**புதிய பாடத்திட்டம் (அரையாண்டு அடிப்படையிலானது)**

**புதிய அனுமதிக்கான தெரிவுப்பரீட்சை - 2018**

மேற்படி குறித்த பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப் பரீட்சையானது எதிர்வரும் 20.01.2019 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை கீழ்வரும் பரீட்சை நிலையங்களில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகி உள்ளன.

1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. யா/ இந்து மகளிர் கல்லூரி
3. திறந்த பல்கலைக்கழகம் - யாழ் பிராந்தியம்

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் 17.01.2019 (வியாழக்கிழமை) காலை 09.00 - மதியம் 12.00 மணி வரையான காலப்பகுதியில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021-222-3612) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*பதிவாளர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
*11.01.2019*

(மி-5120)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 10 . 1960



மறைவு 10 . 01 . 2019

## சுப்ரமணியம் சோதிலிங்கம்

(ஓய்வுநிலை, பதில் லிகிதர் கிராமிய வங்கி- நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்ரமணியம் சோதிலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (10.01.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் -தங்கமுத்து தம்பதிகளின் ஏகப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி -உமாதேவி தம்பதிகளின் மருமகனும், சிவகலை (கலா) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நடராசா, ராசம்மா தம்பதிகளின் பெறாமகனும் காலஞ்சென்றமுத்துக்குமாரு மற்றும் நாகேஸ்வரி, குமாரசாமி, சிவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சண்முகராசா, சிவபாதம் (கொட்டகலை) அவர்களின் மைத்துனரும், தவமணிதேவி (காரைநகர்), சுசிலா (கொட்டகலை) ஆகியோரின் மைத்துனரும், தீசன், செல்வன், ஷியாம் காந்தன், ரேனுஷாருஹா, கிஷோதேவ் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கோப்பாய் பிரதேச செயலக**
**அருகு ஒழுங்கை, கோப்பாய் வடக்கு.**

**தகவல் : குடும்பத்தினர்**
**076 943 6923**

(மி-5132)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 13.12.2018 வியாழக்கிழமை சிவபதமெய்திய எமது அன்புத் தந்தையார்

*தோற்றம் 05 . 10 . 1944*



*மறைவு 13 . 12 . 2018*

(மி-5129)

## அமரர் சிவலை சின்னத்தம்பி (மணியம்)

விளம்பி ஆண்டு கார்த்திகைத் திங்களதில்
வியத்தகு அபரபக்க ஷஷ்டி திதியில்
உயர்ந்த உள்ளம் சிவலை சின்னத்தம்பி
உலக வாழ்வு நீத்த நாளிதுவே

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.01.2019) சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கேணியடி,**
**கரணவாய் மேற்கு, கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# “மக்களை இனியும் ஏமாற்ற வேண்டாம்”

# நாடாளுமன்றைக் கலைத்து தேர்தலுக்குச் செல்வோம்



## மன்றில் மகிந்த சவால்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்குச் செல்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆளும் தரப்பிற்கு நாடாளுமன்றில் சவால் விடுத்துள்ளார்.

பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது புதிய அரசியலமைப்புச் சம்பந்தமான யோசனையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மகிந்த மேற்கண்டவாறு சவால் விடுத்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நீங்கள் தேர்தலுக்கு வாருங்கள். நாம் தேர்தலில் சந்திப்போம்.

அப்போது, அரசியலமைப்பு தொடர்பான எமது யோசனையை நாம் முன்வைக்கின்றோம். நீங்கள் உங்கள் யோசனையை முன்வையுங்கள். மக்கள் தீர்மானிக்கட்டும்.

நாடாளுமன்றத்தையும், மக்களையும் ஏமாற்ற வேண்டாம்.

நீங்கள் செய்யப்போவதை கூறுங்கள். நாம் மக்கள் முன்னிலையில் சென்று மக்களின் ஆணையைப் பெற்று எதிர்கால நடவடிக்கையில் ஈடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசியல் நோக்கத்தில் மகிந்த செயற்படுகிறார்

## சம்பந்தன் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதாக மகிந்த ராஜபக்ஷ அன்று சர்வதேசத்துக்கு வாக்குறுதி அளித்திருந்தார். அதனால்தான் யுத்தத்தை வெற்றிகொள்ள சர்வதேச நாடுகளின் உதவி கிடைத்தது. ஆனால் இன்று அவர் அரசியல் நோக்கத்தில் செயற்படுகின்றார் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அரசியலமைப்பு சபை நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் கூடியது. இதன்போது புதிய அரசியலமைப்பு தொடர்பாக சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் அடங்கிய அறிக்கை முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் கட்சி தலைவர்களின் கருத்துகள் தெரிவிக்கும் நேரத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை பல இன, மத, கலாசாரங்களைச் சேர்ந்த பன்முக சமூகத்தினர் வாழும் நாடாகும். அந்த மக்களின் அடையாளங்கள் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும். எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் இலங்கையர்களாக இருக்க வேண்டும். பல காரணங்களுக்காக நாங்கள் பிரிந்திருக்கலாம். அதனை மறந்து ஒற்றுமைப்பட வேண்டும்.

மேலும் புதிய அரசியலமைப்பு ஊடாக அதிகார பகிர்வு இடம்பெறும்போது பல நன்மைகள் கிடைக்கின்றன. கொழும்பில் மாத்திரம் அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன. அதனால் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு வாய்ப்பு இருக்கின்றது. அதனால் அதிகாரங்கள் மாகாண, மாவட்ட மட்டத்தில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆளுநர் அசாத்சாலிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர, மேல் மாகாண சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊழல் மற்றும் மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுடைய ஒருவர், ஆளுநர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளமை குறித்து தமக்கு நம்பிக்கையில்லையெனத் தெரிவித்தே, இந்த பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

மேல் மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அன்றைய தினம் நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றும் வகையில், கலந்துரையாடி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# 10 வருடங்கள் ஆட்சியிலிருப்பதை உறுதிப்படுத்தும் பட்ஜெட் தயாரிப்பு

## அமைச்சர் ஹர்ச தகவல்

(கொழும்பு)

ஆட்சியில் இன்னும் 10 வருடங்கள் நிலைப்பதை உறுதிப்படுத்துவதற்கான அடித்தளத்தை இடும் வகையில் வரவு-செலவுத்திட்டம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்படுவதாக பொது விநியோகம் மற்றும் பொருளாதார சீர்திருத்தம் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி அரசியல் சதியின் பின்னர் நாட்டுக்கு ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பிலிருந்து நாட்டை மீட்டெடுத்து முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற குழு அறையில் நேற்று முன்தினம் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒக்டோபர் 26 ஆம் திகதியின் பின்னரான 51 நாட்கள் நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மையால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்புத் தொடர்பில் மத்திய வங்கி அறிக்கையொன்றை முன்வைத்துள்ள இக்காலப் பகுதியில் 21 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பின்னர் நாடு எதிர்கொண்டிருக்கும் சவாலை வெற்றிகரமாக முகங்கொடுத்து, அடுத்த 10 வருடங்களுக்கு ஆட்சியில் இருக்கக் கூடிய வகையில் வரவு-செலவுத்திட்டம் மற்றும் அரசாங்கத்தின் திட்டங்கள் தயாரிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய சந்தையில் இலங்கை தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக கடன்களை மீளச்செலுத்துவதற்கான தகுதி நாட்டுக்கு உள்ளது என்ற சூழ்நிலையை ஏற்படுத்தினாலே திறைசேரி மற்றும் முதலீடுகளை நாட்டுக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.

அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்களை விளக்கி சர்வதேச நாணய சந்தையின்ஒத்துழைப்பைக்கோரும் நோக்கில் நிதியமைச்சர் தலைமையிலான குழுவொன்று நியூயோர்க் செல்லவிருப்பதாகவும் தானும் அந்தக் குழுவில் அங்கம் வகிப்பதுடன்சர்வதேசநாணய நிதியத்தின் தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்திக்கவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த வருடம் முதல் 9 மாதங்களில் 407 மில்லியன் அமெரிக்க டொலர்களே நாட்டைவிட்டுச் சென்றுள்ளன. எனினும் கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் 497 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டை விட்டுச் சென்றுள்ளன. பங்குச் சந்தையில் முதல் 9 மாதங்களில் 36 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிச்சென்றபோதும், கடந்த மூன்று மாதங்களில் 97 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிச் சென்றுள்ளன. நாணயப் பெறுமதியிறக்கமானது கடந்த மூன்று மாதத்தில் மாத்திரம் 7.6 வீதமாகும்.

கடந்த வருடம் இலங்கை மாத்திரமன்றி ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் சவாலாக இருந்தன.

இலங்கை போன்று நாணயப் பெறுமதி இறக்கத்துக்கு முகங்கொடுத்திருந்த நாடுகள் பல ஒக்டோபர் மாதத்தின் பின்னர் பலமான நிலைக்குச் சென்றன. எனினும் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் சதியால் முன்னேற முடியாமல் போனது. இதற்கு சதியில் ஈடுபட்டவர்களே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இந்த சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 10 வருடத்துக்கு ஆட்சியில் நிலைத்திருக்கக் கூடிய வகையிலேயே திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவது மாத்திரமன்றி தொடர்ச்சியாக ஆட்சிக்கு வருவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்படும் என்றும் அமைச்சர் ஹர்ச டி.சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய அரசியலமைப்பை நிராகரிப்பது பாரிய பிரச்சினைக்கு வழிவகுக்கும்

## மனோகணேசன் எச்சரிக்கை



(கொழும்பு)

புதியஅரசியலமைப்பு நிராகரிக்கப்படின் அது புலம்பெயர் தமிழர்களுக்கு தவறானதொரு செய்தியை கொண்டு செல்வதுடன், அதனால் ஏற்படும் விளைவுகள் பாரதூரமாக அமையும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை கூடிய அரசியலமைப்பு சபையில் புதிய அரசியலமைப்புக் குறித்த யோசனையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தற்போது சர்வ கட்சிகளின் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கோரும் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பான விடயங்களும் நிபுணர் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில், இதனை நிராகரித்தால் புலிகளை மீள உருவாக்குங்கள். இங்கே பிரச்சினை உண்டு. மீண்டும் யுத்தத்தை ஆரம்பியுங்கள் என்ற செய்தி புலம்பெயர் தமிழர்களுக்கு செல்லும். அதுவா உங்களுக்கு தேவை?

இனவாதம்,மதவாதம், பிரிவினைவாதம் போன்ற காரணங்களால் எமது நாடு முன்னேற்றமின்றி காணப்படுகிறது. தேர்தல் உரிமை பெற்ற ஒரு நாடு இன்று பின்னடைந்து செல்கிறது. இந்நாட்டில் ஒரு சமூகத்திற்கு மாத்திரமே உரிமை உண்டு என்றால் அதுதான் பிரிவினைவாதம்" என மனோகணேசன் தெரிவித்தார். (இ-7)

# பங்காளிகளா அடிச்சு தூக்குவோமா?


வெற்றியாளருக்கு வழங்கப்படும் வெற்றிக் கிண்ணத்துடன் ஆஸி., அணித் தலைவர் பின்ச், இந்திய அணித் தலைவர் ஹோலி (வலது)

- அவுஸ்திரேலியா எதிர்பார்ப்பு
- இன்று இந்தியாவுடன் முதல் மோதல்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தி இரசிகர்களை வெறுப்பேற்றிய அவுஸ்திரேலிய அணி, ஒரு நாள் தொடரில் ஹோலியின் இந்தியாவுக்கு முறையாக 'அடி' கொடுக்க தயாராக உள்ளது. இன்று சிட்னியில் நடக்கும் முதல் போட்டியில் வெற்றியை வசப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, மூன்று 'ரி20', நான்கு டெஸ்ட், மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது 'ரி20' தொடர் 1-1 என சமன் ஆனது. டெஸ்டில் அசத்திய இந்திய அணி, 71ஆண்டுகளுக்குபின்அவுஸ்திரேலிய மண்ணில் முதன்முறையாக தொடரை கைப்பற்றி (2-1) புதிய வரலாறு படைத்தது. இந்நிலையில் ஒருநாள் தொடரின் முதல் போட்டி சிட்னியில் இன்று நடக்கிறது.

லோகேஷ் ராகுல் நாடு திரும்புவதால், இந்திய அணிக்கு ஷிகர் தவான், ரோகித் சர்மா ஜோடி ஆரம்பம் கொடுக்க உள்ளது. மூன்றாவது இடத்தில் களமிறங்கும் அணித் தலைவர் விராட் ஹோலி, தனது ஓட்ட வேட்டையை தொடரலாம்.

**சாதிப்பாரா தோனி**

'நடுத்தரவரிசையில் அம்பதி ராயுடு, தோனி, கேதர் ஜாதவ் களமிறக்கப்படலாம். இதில் 4ஆவது இடத்தில் களமிறங்கும் அம்பதி ராயுடு, கடந்த ஆண்டு நடந்த ஆசிய கிண்ணம், மே.தீவுகளுக்கு எதிரான தொடரில் பங்கேற்ற 11 போட்டிகளில் ஒரு சதம், 3 அரைச்சதம் உட்பட 392 ஓட்டங்கள் எடுத்தார். விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் தோனி, 20 போட்டியில் 275 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தார். இவர், ஒரு அரைச்சதம் கூட அடிக்கவில்லை. இவர் சாதித்து காட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

**பாண்ட்யா பரிதாபம்**

பெண்களை இழிவாக பேசிய சர்ச்சையில் சிக்கிய 'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யா விளையாட இயலாது. இதனால், மூன்றாவது வேகப்பந்துவீச்சாளராக புவனேஷ்வர் குமார் சேர்க்கப்படலாம். பும்ராவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளதால் மொஹமட் ஷமி, கலீல் அகமட் 'வேகத்தில்' நம்பிக்கை அளிக்க காத்திருக்கின்றனர். 'சகலதுறை வீரர்' இடத்துக்கு ரவிந்திர ஜடேஜா தேர்வாகலாம். இவர், குல்தீப் யாதவுடன் இணைந்து 'சுழல் ஜாலம்' காட்டலாம். தேவைப்படும் பட்சத்தில் பகுதி நேர சுழற்பந்துவீச்சாளராக கேதர் ஜாதவை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**அலெக்ஸ் ஆரம்பம்**

சமீபத்திய டெஸ்ட் தொடரில் டேவிட் வோர்னர், ஸ்டீவ் ஸ்மித் இல்லாமல் துடுப்பாட்டத்தில் சொதப்பிய அவுஸ்திரேலிய அணிக்கு விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் அலெக்ஸ் கேரி, முதன்முறையாக ஆரம்பம் கொடுக்க தயாராக உள்ளார். இவருடன் அணித் தலைவர் ஆரோன் பின்ச் களமிறங்குகிறார். 'நடுத்தர வரிசையில்' உஸ்மான் கவாஜா, ஷோன் மார்ஷ், பீட்டர் ஹேண்ட்ஸ்கோம்ப் பலம் சேர்க்கலாம். பின்வரிசையில் மக்ஸ்வெல், மார்கஸ் ஸ்ரொய்னிஸ் கைகொடுத்தால் நல்லது.

வேகப்பந்துவீச்சாளர்களான மிட்சல் ஸ்டார்க், பட் கம்மின்ஸ், ஹேசல்வுட் ஆகி யோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதால், 2010க்கு பின் மற்றொரு வேகப்பந்து வீச் சாளர் பீட்டர் சிடில் ஒருநாள் அணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். 'சுழலில்' நேதன் லயன் கைகொடுக்கலாம். சமீபத்திய டெஸ்ட் தொடரில் 21 விக்கெட் சாய்த்த இவர், இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு தொல்லை கொடுக்கலாம்.

**மழை வருமா?**

சிட்னியில் இன்று வெப்பநிலை அதிகபட்சம் 29, குறைந்தபட்சம் 21 டிகிரி செல்சியசாக இருக்கும். வானம் தெளிவாக காணப்படும் என்பதால் மழை வர வாய்ப்பு இல்லை.

**48 ஒருநாள் போட்டி**

அவுஸ்திரேலிய மண்ணில், இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் இதுவரை 48 ஒருநாள் போட்டியில் மோதியுள்ளன. இதில் இந்தியா 11, அவுஸ்திரேலியா 35ல் வென்றன. இரண்டு போட்டிக்கு முடிவு இல்லை.

# நியூசி., வெற்றி மேல் வெற்றி

## ரி20 தொடரிலும் இலங்கை ஏமாற்றம்

நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒரேயொரு 'ரி20' போட்டியிலும் ஏமாற்றிய இலங்கை அணி 35 ஓட்டங்களால் தோல்வியடைந்து ஏமாற்றமடைந்தது.

ஏற்கெனவே ஒருநாள், டெஸ்ட், ரி20 தொடர்களை பறிகொடுத்த இலங்கை இறுதியாக ரி20 தொடரையும் இழந்து வெறுங் கையுடன் நாடு திரும்புகிறது.

நியூசிலாந்து - இலங்கை அணிகள் மோதிய ஒரேயொரு போட்டி கொண்ட ரி20 போட்டி நேற்று ஆக்லாந்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. நியூசிலாந்து அணிக்கு மார்டின் கப்டில் (1), ரிம் செய்பெர்ட் (2), ஹென்ரி நிகோல்ஸ் (4) ஏமாற்றினர். கொலின் முன்ரோ (16), சாண்ட்னர் (13) நிலைக்கவில்லை. பிரஸ்வெல் (44), ரொஸ் டெய்லர் (33), ஸ்காட் (35*) கைகொடுத்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களை எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு சதீரா சமரவிக்ரம (0) அதிர்ச்சி ஆரம்பம் அளித்தார். நிரோஷன் டிக்வெல (18), குசல் பெரேரா (23), குசல் மெண்டிஸ் (17) சோபிக்கவில்லை. திசர பெரேரா (43) ஆறுதல் அளித்தார். தனஞ்செய டி சில்வா (10), ஷானகா (7), அணித் தலைவர் மலிங்க (6) உள்ளிட்ட மற்றவர்கள் ஏமாற்ற.

இலங்கை அணி 16.5 ஓவர்களில் 144 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் பெர்குசன், இஷ் சோதி தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# மரண அறிவித்தல்

## முருகேசு சிதம்பரப்பிள்ளை

**(முன்னாள் ப.நோ.கூ.சங்க செயலாளரும் பணிப்பாளர் சபை உறுப்பினரும், யாழ்.மாவட்ட துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்க உறுப்பினரும், உரும்பிராய் இராமகிருஸ்ண மிஷன் நூலக பொறுப்பாளரும்)**

**தோற்றம்: 1949.01.31** **மறைவு: 2019.01.09**



அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிதம்பரப்பிள்ளை கடந்த 09.01.2019 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - அமுது தம்பதிகளின் கனிஷ்ட மகனும் காலஞ்சென்ற மாரிமுத்து - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வநாயகியின் அன்புக் கணவரும் சிஜாமினி (லண்டன்), சிவதர்சன், கிருஸ்ணபவாணி (பகுதிநேர ஆசிரியை - இராமகிருஸ்ண மிஷன் - உரும்பிராய்), கோகுலவாணி (ஆசிரியை - Royal Institute International School - Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிமலனின் (லண்டன்) அன்பு மாமனாரும் தீபிகா, பிரிதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் நடராஜா, காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2019) ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்
077 862 3310, 077 658 2952

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை-சுன்னாகம்
## ஒப்பந்த அடிப்படையிலான கனரக உபகரண இயக்குநர் (Heavy Equipment Operator) பதவியணிக்கான வெற்றிடம் நிரப்புதல் -2019

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் **DMS/NP/0304** ஆம் இலக்க, 2018.03.27 ஆம் திகதிய கடிதம் மூலம் வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான கனரக உபகரண இயக்குநர் பதவியணியில் உள்ள வெற்றிடத்தினை பிரதம செயலாளர், வடமாகாணம் அவர்களின் **NP/01/02/03/01/14** ஆம் இலக்க, 21.11.2018 ஆம் திகதிய அனுமதி கடிதத்திற்கமைய உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி. இல | பதவிப்பெயர் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கனரக உபகரண இயக்குநர் (ஒப்பந்த அடிப்படை) | 01 |

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலானது.
2. தங்களது பதவி 1 வருட ஒப்பந்த காலத்தைக் கொண்டதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் உடன் முந்திய 5 வருட காலம் தொடர்ச்சி யாக நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
3. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
4. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். சபையால் தெரிவு செய்யப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றுக்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
5, விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வலிகாமம்தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில்ரூபா 100.00+(**VAT 15%, NBT2%**) இனைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால்உறையின்இடது பக்க மேல்மூலையில்விண்ணப்பிக்கும்பதவியின்பெயர்குறிப்பிடல்வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் பொய்யானது என நியமனத்திற்கு முன்னராகவோ, பின்னராகவோ தெரியவரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்
6. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பமுடிவு திகதி 2019.01.28 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப்பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**கல்வித்தகைமைகள்**

1. கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வு களில் இரு திறமைச்சித்திகளுடன் ஒரு அமர்வில் 05 பாடங்கள் சித்தியடைந்தும், ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்தும் இருத்தல் வேண்டும்.
2. பதவி தொடர்பான அரச தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற்தகைமைச்சான்றிதழ் ஆகக்குறைந்த மட்டம் 4 அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொழிற் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்குக் குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை (Class of Vehicle C,CI) விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று வருடங்களிற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
4. மோட்டார்வாகன சாரதியாக மூன்று வருட அனுபவத்திற்கான சான்றிதழ்பெற்றிருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல்வேண்டும்.
6. விண்ணப்பதாரி இரவு பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
7. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவினைக்கொண்டிருத்தல் வேண்டும்.

**மாதாந்த சம்பளம்** :- மொத்த மாதாந்த படி ரூபா 32,891.00 மாத்திரம் வழங்கப்படும் வேறு எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**11.01.2019**

திரு.தி.சுதர்சன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

(C-5126)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை-சுன்னாகம்
## அட்டவணைப்படுத்தப்படாத பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல்-2019

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்கு 2013.01.01இல் அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கு அமைவாகவும், பிரதம செயலாளர், வடமாகாணம் அவர்களின் **NP/01/02/03/01/14** ஆம் இலக்க, 2018.09.25ஆம் திகதிய அனுமதி கடிதத்திற்கு அமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களை உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமை உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | பதவிகள் | வெற்றிடம் |
|---|---|---|
| 01 | நூலக பரிசாரகர் தரம் III | 01 |
| 02 | வேலை/வெளிக்களத் தொழிலாளி தரம் III | 03 |
| 03 | சுகாதாரத் தொழிலாளி தரம் III | 02 |

**மாதாந்த சம்பளஅளவுத்திட்டம்**

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 03/2016ற்கு அமைவான, சம்பளத் தொகுதி **(PL1-2016)** இற்கு ஏற்ப சம்பள அளவுத்திட்டமானது **(24250 – 10 x 250– 10 x 270 – 10 x 300 – 12 x 330 – 36410)** ஆகும். (ரூபா 25000 சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல்வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை – II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்

**கல்வித்தகைமை**

கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகளுடன் ஒரு அமர்வில் 05 பாடங்கள் சித்தியடைந்தும், ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்தும் இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

1. இப்பதவிகள் நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதும் ஆகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் 03 வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத்தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பெறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் உடன் முந்திய 5 வருட காலம் தொடர்ச்சியாக நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

**தெரிவுசெய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வலிகாமம்தெற்கு பிரதேசசபையின்தலைமை அலுவலகத்தில்ரூபா 100.00+(**VAT 15%, NBT2%**) செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் மீள அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு "செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புதிட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரியால் முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோ, அல்லது நியமனத்தின் போதோ பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

1. விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தினை தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பிவைத்தல் வேண்டும்.
2. ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் அவசியமன்று.

**விண்ணப்ப முடிவுத் திகதி**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2019.01.28ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

தி.சுதர்சன்,
செயலாளர்.

வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C-5127)

## இராசி பலன்

**மீனம்**

எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள்.

**மேடம்**

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், எடுத்த காரியத்தில் அனுகூலம் கிடைக்கும்.

**இடபம்**

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், தூர தேசத்தி லிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்**

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்**

பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| சந் | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம் இரவு 11.21 மணிக்கு மீன-சந் | | ராகு |
| கேது | | | |
| சூரி, புத சனி | குரு, சுக் | | |

**12.01.2019**
மார்கழி 28, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 6.59 மணிவரை
உத்திரட்டாதி முழுவதும்
சுபநேரம் 3.33-5.03 மணிவரை
இராகுகாலம் 9.33-11.03 மணிவரை
சஷ்டி விரதம், சர்வதேச இளைஞர் தினம்
**வளவன்**

**கடகம்**

உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**மகரம்**

ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், உங்கள் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு**

மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**

மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப செலவுகள அதிகரிக்கும் நாள்.

**துலாம்**

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வாக்கு மேன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி**

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

## திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாவற்குழியிலுள்ள திருவாசக அரண்மனையில் திருவாசக முற்றோதல் இன்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் தமிழ்ச்சங்க உபதலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் சிறப்புரையாற்றுவார். (இ-7)

## திண்மக்கழிவுகளைத் தரம் பிரிப்பதற்கு சாவகச்சேரியில் ஆலோசனைக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் சனசமூக நிலையங்கள் மற்றும் சமய நிறுவனங்களுடனான திண்மக்கழிவுகளைத் தரம் பிரித்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெறும்.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சமய நிறுவனங்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் தலைவர் மற்றும் செயலாளரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சாவகச்சேரி நகரசபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-30)

## சாவகச்சேரி நகரசபை கொல்களத்தில் மாடுகளை இறைச்சியாக்க முடியுமாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் விழாக்களின் போது இறைச்சியாக்கப்படும் ஆடுகள் மற்றும் மாடுகளை சாவகச்சேரி நகரசபையின் கொல்களத்தில் இறைச்சியாக்க முடியும் என சாவகச்சேரி நகரசபையினர் தெரிவித்துள்ளனர்.

விழாக்கள், பண்டிகைகள் மற்றும் ஏனைய தேவைகளின் நிமித்தம் கால்நடைகளை குடியிருப்புப் பகுதிகள் மற்றும் காட்டுப் பகுதிகளில் சட்டவிரோதமாக இறைச்சியாக்காமல் நகரசபையினரின் உரிய அனுமதியைப் பெற்று இறைச்சியாக்க முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

கடந்த முதலாம் திகதியிலிருந்து சாவகச்சேரி நகரசபையின் இறைச்சிக் கடைகள் யாரும் உரிமம் பெறாமையால் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே நகரசபையின் பொறுப்பில் தற்போதுள்ள கொல்களத்தை பிரதேச வாசிகள் பயன்படுத்தலாம் என நகர சபையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-30)

## தரப்படுத்தலில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 83 சனசமூக நிலையங்களில் 2018 ஆம் ஆண்டிற்கான நிர்வாகச் செயற்பாட்டுத் தரப்படுத்தலில் அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் முதலிடம் பெற்றுள்ளது.

இதனை முன்னிட்டுவிருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த சனசமூக நிலையம் கடந்த ஆண்டு தரப்படுத்தலில் 3 ஆம் இடத்தைப் பெற்றதுடன் இம் முறை முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

இந்த நிலையம் இனம், மொழி, பண்பாட்டின் அடிப்படையில் பிரதேச மக்களின் அபிவிருத்திக்காகப் பணியாற்றிவருவதுடன் எதிர்காலத்தில் பல்வேறு புதிய திட்டங்கள் வகுத்துச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-9)




## 7 வழக்குகள் தாக்கல் ரூ.70 ஆயிரம் அபராதம்

நுகர்வோர் அதிகார சபையின் சட்டதிட்டங்களை மீறிய வர்த்தகர்களுக்கெதிராக யாழ். சிறுவர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் 7 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 70 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-10)

## அமுத விழாவும் 'பஞ்சநதி' மலர் வெளியீடும் இன்று



(யாழ்ப்பாணம்)

அமுதவிழாவும் "பஞ்சநதி" மலர் வெளியீடும் இன்று 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர், ஆசிரியர், மேனாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் கலந்து கொள்வார்.

வாழ்த்துரைகளை யாழ். சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா, வடமாகாண இலங்கை தேசிய கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் வண. அருட்தந்தை சொலமன் டிக்ஷன், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் க.தேவராஜா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா (பழைய மாணவர்) "ஆறுதல்" நிறுவன பிரதம நிறைவேற்று அதி காரி சுந்தரம் டிவகலாலா, கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபர் க.ஜெகநாதன் (பழைய மாணவர்), யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் அ.சத்தியமூர்த்தி ஆகியோர் வழங்குவர்.

மலர்வெளியீட்டினை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரை இணைப்பாளர் பா.பாலகணேசன் நெறிப்படுத்துவார். வெளியீட்டுரையை வவுனியா மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் (பழைய மாணவர்) வழங்குவார். மலர் நயப்புரையை வலம்புரி பிரதம ஆசியர் ந.விஜயசுந்தரம் வழங்குவார். (இ-5)

## முச்சக்கர வண்டிகளுக்கு கட்டாயமாக மீற்றர் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்

### இல்லையேல் தரிப்பிட அனுமதி இரத்து யாழ்.மாநகரசபை முதல்வர் அறிவுறுத்து



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில்மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தின் அடிப்படையில்,

"2018.12.31 ஆம் திகதிக்குப் பின்னர் யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள மாநகர எல்லைக்குள் சேவையில் ஈடுபடுத்தப்படும் அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் 2019.01.01 ஆம் திகதி தொடக்கம் மீற்றர் பொருத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இந் நடைமுறை முறையாக முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் கீழ் பதிவுகளைக் கொண்டுள்ள மாநகர எல்லைக்குட்பட்ட முச்சக்கர வண்டிகளில் மீற்றர் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் உரிமையாளர்களை அறிவுறுத்துவதோடு, மீற்றர் பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பாக பொலிஸ் மற்றும் உரிய திணைக்களங்களினால் இம்மாதம் கண்காணிக்கப்பட்டு எதிர்வரும் 2019.01.25 - 2019.01.31 ஆம் திகதி வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் மீற்றர் பொருத்தாத உரிமையாளர்கள் எச்சரிக்கப்படுவார்கள் என்பதோடு, 2019.02.01 ஆம் திகதியிலிருந்து கட்டாயமாக மீற்றர் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு, அவ்வாறு மீற்றர் பொருத்தாத மாநகர எல்லைக்குட்பட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கான தரிப்பிட அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டு, தரிப்பிடம் மீளப் பெறப்படும்" என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தீர்மானத்தைக் கருத்திற்கொண்டு உரிய முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு முச்சக்கர வண்டி உரிமையாளர்களை மீற்றர் பொருத்த தயார்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட் அறிவித்துள்ளார். (இ-7)

## முன்பள்ளிச் செயற்பாட்டுக் குழுவை வடமாகாணத்தில் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களை உள்ளடக்கியதான மாகாண முன்பள்ளிச் செயற்பாட்டுக் குழுவை அமைப்பதற்குரிய கொள்கை வகுப்புக்கள் வடமாகாண ஆரம்பப்பிள்ளைப் பருவப் பணிப்பாளர் ஜெயா தம்பையா தலைமையில் இடம்பெற்று வருவதாக உதவிப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் தெரிவித்தார்.

இச் செயற்பாட்டின் மூலம் மாகாணத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளின் தேவைகள் தொடர்பிலும் அவை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் ஓர் தெளிவான அறிக்கையைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இச் செயற்பாட்டுக் குழுவில் பல்துறைசார் நிபுணத்துவமிக்கவர்களை இணைத்து எதிர்காலத்தில் முன்பள்ளிகளைச் சிறந்த வினைத்திறன் மிக்க முன்பள்ளிகளாக்குவதே தமது நோக்கமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விநாயகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (இ)

## 'கருத்துக்களால் களமாடுவோம்' அரசியல் கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசியல் ஆர்வலர் குழாம் நடத்தும் "கருத்துக்களால் களமாடுவோம்" அரசியல் கருத்தரங்கு இன்று 12 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சிவில் சமூக பிரதிநிதிகளின் வாதங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் பதிலுரையாற்றுவார்.

இதில் வரவேற்புரையை வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தனும் தலைமையுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் வழங்குவர்.

கருத்துரைகளை வல்வெட்டித்துறை சிவன் கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ பமனோகரக்குருக்கள், தென்இந்திய திருச்சபைப் பேராயர் அதி.வண.டானியல் தியாகராஜா, யாழ்.பல்கலைக்கழக பொறியியல்பீட கலாநிதி சு.சிவகுமார், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் ஆகியோர் வழங்குவர். (இ-5)

## கலைஞர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ள கலாசார, பண்பாட்டுப் பெருவிழாவில் பிரதேசத்தைச் சார்ந்த கலைச்சேவையாற்றிய கலைஞர்களைக் கௌரவிப்பதற்கு பிரதேச கலாசாரப் பேரவை தீர்மானித்துள்ளமையால் கலைஞர்களின் பெயர் விபரத்துடன் அவர்களது கலைச்சேவைகள் பற்றிய குறிப்புக்களைக் கலைஞர்கள் அல்லது தெரிந்தவர்கள் செயலகத்திற்கு எதிர்வரும் 20.01.2019 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் எப்.சி. சத்தியசோதி அறிவித்துள்ளார். (இ)

## 'திருவாசக மணி' விருது வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையால் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத நடராசர் சந்நிதானத்தில் அண்மையில் நடத்தப்பட்ட திருவாசக முற்றோதலில் சமய, சமூக சேவையாளரும் இசைக் கலைஞருமான கலாபூஷணம் கந்தப்பு லோகேஸ்வரன் நல்லை ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளால் "திருவாசக மணி" என்னும்விருதுவழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (இ)

## உழவர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

சமூகம் ஊடகக் குழுமத்தினரின் உழவர் திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் மந்துவில் வடக்கு குடியிருப்பு புளியந்திடல் சிறீ கந்தசாமி கோவிலில் நடைபெறும்.

பொங்கல்பூசையைத்தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுக்களும் நடைபெறும். (இ-5)

# புலிகளைக் குறைகூறும் அருகதை எனக்கில்லை

## ஒஸ்லோ பிரதி மேயர்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை குறை கூறுவதற்கான தேவையோ அல்லது அதற்கான அருகதையோ தனக்கில்லை என, நோர்வே தலைநகர் ஒஸ்லோவின் பிரதி மேயர் கம்சாயினி குணரத்னம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் பெண்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கவில்லை என்ற ஒஸ்லோ பிரதி மேயரின் கருத்து கடந்த காலங்களில் பல்வேறு சர்ச்சைகளை தோற்றுவித்திருந்தது.

இந்நிலையில், அது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தவொரு இடத்திலும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்காக குரல் கொடுப்பவர் என்ற வகையில் ஒரு உதாரணமாகவே விடுதலை புலிகளை சுட்டிக் காட்டியதாகவும், அவர்களை குறை கூற வேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்தார்.

தமிழ் சமூகம் ஒரு குடும்பம். எனவே தங்களுக்குள் பிழைகளை சுட்டிக்காட்டுவது ஒருவரை குறை கூறுவதற்காக அன்றி, தம்மை முன்னேற்றிக் கொள்வதற்காகவே என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## வெற்றிடம்- பண்ணை அலுவலர்

வளர்ந்து வரும் ஒருங்கிணைந்த இயற்கை விவசாயப் பண்ணையில், விரிவாக்க, வெளிக்கள வேலைகளைப் பொறுப்பேற்கவும், பண்ணை வேலைகளில் பங்கேற்கவும் ஒருவர் தேவை. விவசாயத்துறையில் தகைமை பெற்றவர்கள் அல்லது முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

பூரண விபரங்களுடன் உடனே விண்ணப்பிக்கவும்

மின்னஞ்சல்:slstrust@hotmail.com
தபால் முகவரி: திருநாவுக்கரசு நினைவு மாதிரிப் பண்ணை, நெசவுநிலைய வீதி, மாவிட்டபுரம்,தெல்லிப்பழை.

(7117)


# இன்றிலிருந்து 3 நாட்களுக்குள் வீட்டைச் சுத்தம் செய்யவேண்டும் இல்லையேல் சட்ட நடவடிக்கை

## வைத்திய அதிகாரி எச்சரிக்கை





(யாழ்ப்பாணம்)

காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பயன்பாட்டில் இல்லாத வீடுகளின் உரிமையாளர்கள் இன்றில் இருந்து மூன்று தினங்களுக்குள் தமது வீட்டை சுத்தம் செய்ய வேண்டும் என அறிவித் ள்ள சுகாதார வைத்திய அதிகாரி பா.நந்தகுமார், அவ்வாறு சுத்தமாக்கப்படாது காணப்படும் வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் யாழ்.மாவட்டத்தில் . முன்னெடுக்கப்பட்டது. அந்த வகையில் காரைநகர் ஊர்காவற்றுறையிலும் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பிரிவு மற்றும் பொலிஸார் இணைந்து வீடுகள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது இடங்கள் என்பவற்றுக்கு நேரடியாகச் சென்று சோதனைகளில் ஈடுபட்டனர்.

அப்பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்கள் அவதானிக்கப்பட்டு வீட்டு உரிமையாளர்கள் மூலம் உடனடியாகவே சுத்தம் செய்யப்பட்டது. அத்துடன் ஆட்களற்ற வெற்றுக் காணிகளுக்கு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டது.

குடம்பிகள் உற்பத்தியாகக்கூடிய வகையில் கிணறுகள் மற்றும் கழிவு நீர்த் தொட்டிகளை வைத்திருந்த சிலருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிலருக்கு அவற்றைச் சுத்தம் செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஆனால் பல பகுதிகளிலுள்ள வீடுகள் பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன. அவற்றின் உரிமையாளர்கள் வெளி இடங்களில் வசித்து வருகின்றனர். அதனால் குறித்த வீடுகள் கவனிப்பாரற்று காணப்படுகின்றன. அங்கு நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் பல பகுதிகள் காணப்படுகின்றன. கொள்கலன்கள், மலசலகூட குழிகள், கிணறுகள் என்பன சுத்தம் செயயப்படாது காணப்படுகின்றன. எனவே உரிமையாளர்கள் மூன்று தினங்களுக்குள் அவற்றைச் சுத்தம் செய்து எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அவ்வாறு சுத்தம் செய்யப்படாத வீடுகளின் உரிமையாளர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:A/Lசாரதி (அரச)<br>தொ.இ: B/9087 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 20 உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:A/L அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில், சைவ போசனம்<br>தொ.இ: G/1921 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 36 செவ் இல்<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்:A/Lஆய்வு கூட உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரசதொழில்<br>தொ.இ: B/9088 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 13 3/4 உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:B.Sc IT, Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant, Lecturer, Doctor etc.<br>தொ.இ: G/1922 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L, London PR<br>தொ.இ: B/9093 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 36 உயரம்: 5’<br>தகைமை/தொழில்:B.Sc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, அரசசார்பற்ற உத்தியோகம்<br>தொ.இ: G/1926 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: O/L, Painter<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/9095 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 16 1/2<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:IT Degree, Software Analysis<br>எதிர்பார்ப்பு: Professional Qualified<br>தொ.இ: G/1935 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# வீதிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் சென்றது

## அதிகாரிகள் மீது மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட 8 வீதிகளைப் புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட 5.8 மில்லியன் ரூபா நிதி அரச அதிகாரிகளின் அசமந்தப்போக்குக் காரணமாக திரும்பிச் சென்றதாகப் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த வருட இறுதியில் பிரதேச சபை வீதிகளை புனரமைக்கவென தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதியில் நெசவு சாலைவீதி, சக்தி அம்மன் வீதி, திருவள்ளுவர் சனசமூக நிலைய வீதி, முருகன் கோவில் வீதி, முத்து மாரியம்மன் வீதி, மெதடிஸ்ற் நகர் வீதி, சாரைகிளி வீதி மற்றும் குமுதினிப் பிள்ளையார் வீதி உள்ளடக்கப்பட்ட போதும் எந்தவொரு வீதிகளுமே புனரமைக்கப்படவில்லை. இதற்கான காரணத்தை பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் வினவிய போது, சில காரணங்களைக் கூறி குறித்த நிதி திரும்பிச் சென்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே இனிவரும் காலங்களிலாவது மக்கள் சேவை தொடர்பில் அதிகாரிகள் உரிய கவனமெடுத்துச் செயற்பட வேண்டுமெனப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)


## மணமகள் தேவை

1978இல் பிறந்த படித்து நல்ல பதவியிலுள்ள கம்பீரமான விவாகரத்து பெற்ற, பொறுப்புக்கள் இல்லாத, பிரான்ஸ் பிரஜை கேட்டை விருச்சிகம். பாவம் 38 இவருக்கு யாழ்.இந்து கௌரவ பெற்றோர் தகுந்த படித்த இந்து கௌரவ குடும்பப் பெண்ணை மணமகளாக தேடுகின்றனர்.

தொடர்பு: இலங்கை 0770488243
0768596745
Viber:- +33651156938
email:- muruga46@hotmail.com

(6994)

## மணமகள் தேவை

1982இல் பிறந்த பிரான்ஸ் பிரஜை கார்த்திகை, இடபம். பாவம் 19. யாழ்.இந்து கௌரவ பெற்றோர் படித்த அழகிய இந்து மணமகளை தேடுகின்றனர்.

தொடர்பு: இலங்கை 0768596745
Viber:- +33651156938
email:- muruga46@hotmail.com

(6994)

# வழக்கத்திலிருந்த நில உரிமை முறைமைகளும் மண்ணின் மகிமை (பிம்சவிய) நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காணி உரித்துப் பதிவும்

01

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இலங்கையின் இயற்கை வளங்களில், கடல் வளங்களுக்கு அடுத்ததாக மிகப்பரந்த இயற்கை வளமாகக் காணியுள்ளது. காணிவளங்களில், வனம், வனவிலங்கு, நீர், கரையோர வளங்கள் ஆகியன அடங்குகின்றன. இவை ஒன்றுக்கொன்று பொருளாதார முறைகளில் மாத்திரமன்றி, சட்டவாக்க முறைகள் தொடர்பிலும் தங்கியிருக்கின்றன. இலங்கையில் காணி வளங்களின் முகாமைத்துவத்துடன் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏறத்தாழ 100 வரையிலான வெவ்வேறு வகையான நியதிச் சட்டங்கள் தற்போது உள்ளன. இவற்றில் பெரும் எண்ணிக்கையிலானவை சுதந்திரம் பெற்ற காலத்திற்கு முந்தியவை. சில ஒரு நூற்றாண்டுக்கு மேல்பழைமை வாய்ந்தவை. இந்தச் சட்டங்களின் முகாமைத்துவமும் கொள்கை அணுகுமுறைகளும் பெரும்பாலும் அந்தக் காலத்தில் இருந்த அரசாங்கத்தின் சமூக பொருளாதார நிலைமைகளையும் கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் பிரதிபலிக்கின்றன.

மேலும் அரச நிறுவனமாற்றங்கள், புதிய அரச நிறுவனத் தோற்றங்கள், இவற்றின் அதிகார வரம்பு தொழிற்பாடுகளில் ஒன்றுக்கொன்றுக்குள்ள முரண்பாடுகள், ஐயப்பாடுகள், சட்ட விதிகளிலுள்ள குறைபாடுகள், நிர்வகிக்க முடியாத நடைமுறைகள் என்பன இந்தச் சட்டங்களை உறுதியாகச் செயற்படுத்துவதில் பெருமளவு கஷ்டத்தைத் தோற்றுவிக்கின்றன.

**2001ஆம் ஆண்டு உலக வங்கித் தகவலின்படி, இலங்கையில் பெரும்பகுதிக் காணிகள் 85.82% அரசாங்க உடைமையாகவும் 14.18% தனியார் வசமும் உள்ளன.**

**காணி உரிமை என்பது மனிதனின் இன்றியமையாத பொருளாதார உரிமையாகும். இவ்வுரிமை பிறருடைய சட்ட வழி உரிமையை பாதிப்பதாக இருத்தல் கூடாது என்பதுடன் அது சட்டரீதியான நிர்வாகி ஒருவரினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.**

2001ஆம் ஆண்டு உலக வங்கித் தகவலின்படி, இலங்கையில் பெரும்பகுதிக் காணிகள் அரசாங்க உடைமையாக, அதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. இலங்கையின் நிலப்பரப்பு 6.56 மில்லியன் ஹெக்டயராகும். இந்த மொத்தப் பரப்பில் சுமார் 21.04% விவசாய மற்றும் வீட்டுக் காணியாக இருப்பதோடு அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகும். எனினும் இக்காணிகள் பல்வேறு வகைப்பட்ட சொத்து அனுபவிப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் தனிப்பட்ட விவசாயிகளினால் செய்கை பண்ணப்படுகின்றன.

இவற்றில் பெரும்பாலானவை குத்தகை மற்றும் விற்பனைக்கு உட்பட்டவையாகும். மற்றுமொரு 13.42% காணி தனியார் வசம் உள்ள விவசாய மற்றும் வீட்டுக் காணியாகும். நகர்ப்புறக் காணியில் 0.76% தனியாருக்கும் 0.15% அரசாங்கத்திற்கும் சொந்தமானதாகும்.

மிகுதியாகவுள்ள 64.63% அரசாங்கக் காணிகளாகும். இவை காடுகளாகவும், இடைக்கிடையே பயன்படுத்தப்படும் காணிகளாகவும் வருங்காலப் பயன்பாட்டுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளாகவும் உள்ளன.

காணி உரிமை என்பது மனிதனின் இன்றியமையாத பொருளாதார உரிமையாகும். இவ்வுரிமை பிறருடைய சட்ட வழி உரிமையை பாதிப்பதாக இருத்தல் கூடாது என்பதுடன் அது சட்டரீதியான நிர்வாகி ஒருவரினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இவ் உரிமையை நிலைநாட்டுவதற்கு சட்ட ஆவணம் ஒன்று இருத்தல் வேண்டும் என்பதுவும் அவசியமாகியுள்ளது. இன்று எமது நாட்டில் காணியானது இனவிரிசல் மற்றும் சமூகவிரிசல்களை ஏற்படுத்தி வருகிறது.

இலங்கையில் ஒருவர் எப்பிரதேசத்திலும் ஆதனத்தை வைத்துக் கொள்ள முடியும். இதற்கு காணி பற்றிய அறிவினை பெற்றுக் கொள்வதன் மூலம் ஒருவரின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

காணி உரிமையினை ஒருவர் நிலைநாட்டுவதற்கு ஆதனத்தின் இடாப்பு, அட்டவணை என்பனவற்றில் தெளிவாக குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அதுமட்டுமன்றி கையொப்பங்கள் முத்திரைகள் என்பன தெளிவாக இடப்பட்டிருத்தல் வேண்டும். சட்டரீதியாக பதியப்பட்டிருக்கும் வலிதான ஆவணம் ஒன்றின் மூலம் உள்ள நிபந்தனைகள் அனைத்தும் உரிமையாளரையும் அவருக்குப் பின்னர் உரிமையாளராக வரும் சகலரையும் கட்டுப்படுத்தும்.

இலங்கையினைப் பொறுத்தவரையில் காணி உரிமைகள் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு உரிமையாகவும், பொருளாதார உரிமையாகவும் காணப்படுகின்ற அதேவேளை பல்வேறுபட்ட சட்டங்களினால் நெறிப்படுத்தப்பட்டவையாக காணப்படுகின்றது. இலங்கையின் அரசியல் அமைப்பின் மூன்றாம் அத்தியாயத்திலுள்ள அடிப்படை உரிமையின் 14ஆவது உறுப்புரையில் ஒருவர் தான் விரும்பிய இடத்தில் வசிப்பதற்கும், தொழில் செய்வதற்குமான பொருளாதார உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் காணி உரிமையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவே கொள்ள முடியும். அத்துடன் இலங்கை சர்வதேச சமவாயங்களில் கையொப்பம்இட்டுஏற்றுக்கொள்வதன்மூலம் அச்சமவாயங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பொருளாதார உரிமையான காணி உரிமையினை ஏற்றுக் கொண்டுள்ளது.

அதுமட்டுமன்றி பல்வேறுபட்ட சட்டங்கள் மூலம் காணி தொடர்பான விடயங்களை நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்தியுள்ளது. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை எடுத்துக் கொண்டால் உறுப்புரை 17 இல் ஆதனம் ஒன்றை தனியாகவோ அல்லது கூட்டாகவோ சொந்தமாக வைத்திருப்பதற்கு உரிமை நிலையிடுகின்றது. அத்துடன் ஒருவருக்கு சொந்தமான ஆதனம் ஒருதலைப்பட்ச மனப்போக்காக பறிக்கப்படுதல் கூடாது எனவும், ஒருவரின் ஆதனம் தொடர்பான உரிமையினை பாதுகாக்கின்றது.

முன்னர் கூறியதுபோல் இலங்கையைப் பொறுத்தவரையில் காணிகள் பொதுவாக அரசகாணி, தனியார் காணி என இரு வகைகளில் பிரிக்கப்பட்டு அவை தொடர்பான உரிமைகளும்சட்டரீதியான முன்னெடுப்புக்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. அரச காணி என்பது இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை அரசிற்கு சொந்தமான காணியாகும். தனியார் காணி என்பது தனியாளுக்கு அல்லது குழுவிற்கு பரம்பரை வழியில் வந்த தனிப்பட்ட காணிகள் ஆகும்.

பெரும்பாலும் அரச காணி எது, தனியார் காணி எது என்று அடையாளப்படுத்துவதிலேயே காணி தொடர்பான பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன. காணி விற்பனை, காணி கொள்வனவு, காணி சுவீகரிப்பு போன்றவற்றின் போது அரச காணியா? தனியார் காணியா? என்ற பிரச்சினை எழுகின்றது.

குறிப்பாக அரச காணி பற்றியும் தனியார் காணி பற்றியும் அடையாளப்படுத்துவதற்கு நில அளவைத் திணைக்களத்தில் காணியின் கடத்திரள் வரைபடத்தினை பரிசீலிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**கடத்திரள் (Cadastre) என்பது ஒரு காணித்துண்டின் விஸ்தீரணம் (பரப்பு), உரிமையாளர், உரிமையின் வகை, காணியின் பாவனை, அமைவிடம், எல்லைகள், மற்றும் பெறுமதி போன்ற தகவல்களைக் கொண்ட பதிவேடாகும்.**

**அரச காணி பற்றியும் தனியார் காணி பற்றியும் அடையாளப்படுத்துஷவதற்கு நில அளவைத் திணைக்களத்தில் காணியின் கடத்திரள் வரைபடத்தினை பரிசீலிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.**

கடத்திரள் (Cadastre) என்பது ஒரு காணித்துண்டின் விஸ்தீரணம் (பரப்பு), உரிமையாளர், உரிமையின் வகை, காணியின் பாவனை, அமைவிடம், எல்லைகள் மற்றும் பெறுமதி போன்ற தகவல்களைக் கொண்ட பதிவேடாகும். கடத்திரள் அளவை (Cadastral surveying) என்பது காணிப் பதிவு அலுவலகத்தில் ஒரு காணித்துண்டினைப் பதிவதற்காக காணியைப் புலத்தில் அளந்து மேற்கூறிய தகவல்களைக் கொண்ட கிடைப்படம் ஒன்றை வரைதலாகும். மேலும் காணியின் உரிமையாளர் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வதற்கு காணி தொடர்பான ஆவணங்களை ஆராய்தல் அவசியமாகும்.

தனியார் காணியை பொறுத்தமட்டில் உரிமையாளருக்கு நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்பட்ட காணிக்கு உறுதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். அந்த உறுதியின் உண்மைத் தன்மையை அறிவது தொடர்பில் அக்காணியின் 30 வருடங்களிற்கான வரலாற்றுப் பதிவினை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். காணி உறுதியானது உரிமையாளரிடம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அக்காணி உறுதியானது மாவட்ட காணி பதிவகத்தில் பதியப்படுதல் வேண்டும்.

தனிப்பட்ட காணிகளின் உறுதி மாற்றம் அதிகாரம் அளிக்கப்பட்ட நொத்தாரிசுவினால், கட்சிக்காரர் தெரிவித்த விபரங்கள் அல்லது இதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட உறுதிகளில் குறிக்கப்பட்ட விபரங்களுக்கமைய தயாரித்து காணி உரிமையாளர், கொள்வனவாளர், இரண்டு சாட்சிகள் அனைவரும் ஒரே நேரத்தில் ஒரு நொத்தாரிசு முன்னிலையில் குறித்த உறுதியினை நிறைவேற்றுதல் வேண்டும். அத்துடன் உரிய முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டு மாவட்ட காணிப் பதிவகத்தில் பதியப்படுதல் வேண்டும்.

இதற்கு மூன்று பிரதிகள் தேவை. மூலப் பிரதி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டு உடமையாளருக்கு வழங்கப்படும் உறுதி எழுதப்படுவதினால் அரசாங்கத்துக்கு செலுத்தும் கொடுப்பனவாக முத்திரை ஒட்டப்பட்ட பிரதி உறுதி செய்யப்பட்ட நொத்தாரிஸினால் உள்ளூர் காணிப்பதிவகத்தில் கையளிக்கப்படும். மூன்றாவது பிரதி நொத்தாரிஸின் அலுவலகத்தில் பேணப்படும். பதிவு செய்வதற்கு முன்னதாக உறுதி காணிப் பதிவகத்தில் சரிபார்க்கப்பட மாட்டாது. உறுதியில் தவறேதும் இருப்பின் அதைப்பதிவு செய்வதற்கு மறுக்க பதிவாளருக்கு அதிகாரம் உள்ளது.

தனியார் காணியைப் பொறுத்த வரையில் இத்தகைய உறுதிகள் நிறைவேற்றப்படுவதிலும் அவை பதியப்படுவதிலும் பல்வேறு மோசடிகளும் குளறுபடிகளும் நடப்பதால் மாவட்ட நீதிமன்றத்தில் காணி தொடர்பான வழக்குகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

மேலும் தனியார் காணியைப் பொறுத்தவரையில் காணப்படுகின்ற மிக முக்கியமான பிரச்சினை 'அற்றோனி' தத்துவப் பத்திரம் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவர் காணியினை விற்பது அல்லது மாற்றம் செய்தல் ஆகும். அதுமட்டுமன்றி வெளிநாட்டில் உள்ள ஒருவரின் ஆதனத்தை இங்கு முறைகேடாக விற்பனை செய்தல் போன்றதும் அடங்குகின்றன.

அற்றோனி தத்துவப் பத்திரம் மூலம் காணியைப் பராமரிப்பதற்கும், குடியிருப்பதற்கும் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் அவ் அனுமதிப் பத்திரத்தினை பிழையான முறையில் பயன்படுத்தி காணியை விற்பனை செய்யும் போது காணி கொள்வனவாளர் பாதிப்புக்கு உள்ளாகின்றார்.

(தொடரும்...)

# சட்டத்திற்கும் நீதிக்கும் முரணான சம்பவங்கள் கிழக்கில் இடம்பெறுவதை அனுமதிக்கக்கூடாது

## ஆளுநரிடம் சம்பந்தன் இடித்துரைப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.



இச்சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடிய சம்பந்தன் சட்டத்திற்கும் நீதிக்கும் முரணான சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுவதனை ஆளுநர் அனுமதிக்கக்கூடாது என்றும் முக்கிய விடயங்கள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனையுடனான முடிவுகள் எட்டப்படுவதானது தேவையற்ற முரண்பாடுகளை தவிர்க்கும் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, அரச நிர்வாக நியமனங்கள் வழங்கப்படும்போது அனைத்து மக்களும் சமமாக நடத்தப்படுதல் கிழக்கு மாகாணத்தில் வாழும் பல்லின மக்களிடையே கடந்த காலங்களில் காணப்பட்ட இன விரிசல்களை இல்லாமல் செய்வதற்கு உதவும் எனவும் தெரிவித்தார்.

அனைத்து இன மக்களின் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் புதிய ஆளுநரும் அவரது நிர்வாகமும் செயற்பட வேண்டும் என இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டார். (இ-7)

# திருமறைக் கலாமன்ற பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் ஆண்டு தோறும் நடத்தும் 'பொங்கல் விழா' சில கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் கலை நிகழ்ச்சிகளுடன் இம் முறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றப் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு இல.17,மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலை ஞான சுரபியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில்- கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாக வுள்ளன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கலை நிகழ்ச்சிகளாக திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனமும், திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் வழங்கும் கூத்துபண் இசையும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து மூத்தகவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் 'நேற்றைத் துயரங்கள் நீறாக பொங்குதுபால்' என்னும் பொருளில் கவியரங்கு இடம்பெறவுள்ளது.

இதில் கவிஞர்களான த.ஜெயசீலன், கு.றஜீபன்,ம. ஜொணி,வ. வடிவழகையன் ஆகியோர் பங்கு பற்றுவார்கள். தொடர்ந்து நிறைவு நிகழ்வாக இளவாலைத் திருமறைக் கலாமன்றம் வழங்கும் சோழன் மகன் தென் மோடி நாட்டுக்கூத்து இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-7)

# ஆளுநர் நியமனத்தை இன ரீதியாக பார்க்காதீர்கள் கிழக்கு மக்களிடம் உருக்கமாக கேட்கும் ஹிஸ்புல்லா

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண ஆளுநராக நான் நியமிக்கப்பட்டதன் பின்னர் சில சகோதரர்கள் இனரீதியான முரண்பாடுகளை தோற்றுவித்து இனரீதியாக பார்ப்பதை நான் அவதானிக்கின்றேன்.

இது தொடர்பிலே ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு போன்ற விடயங்களுக்கு ஒரு சில சகோதரர்கள் முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் அறிகின்றேன் என கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஹிஸ்புல்லா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குறிப்பாக கிழக்கு மாகாண மக்கள் நாம் எல்லோரும் சந்தோசப்படவேண்டும் எங்களது மொழியை பேசுகின்ற எங்களோடு சேர்ந்து செயற்படக் கூடிய என்னை நியமித்தமைக்காக நீங்கள் எல்லோரும் பெருமைப்பட வேண்டும்.

குறிப்பாக நான் ஆளுந ராக நியமிக்கப்பட்டிருப்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கோ குறிப்பிட்ட பிரதேசத்திற்கோ அல்லது குறிப்பிட்ட மாவட்டத்திற்கோ அல்ல மொத்த கிழக்கு மாகாணத்திற்குமே ஆகும்.

நான் ஆளுநர் பதவியை பொறுப்பெடுத்த நாள்முதல் கிழக்கு மாகாணத்து அனைத்து மக்களும் என்னுடைய சகோதரர்கள், எனது சகோதரிகள் , எனது தாய்மார்கள், தந்தையர்கள், தம்பிமார், தங்கைமார், அண்ணன், தம்பி என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

ஆகவே மாகாணத்தில் வாழுகின்ற அனைத்து மக்களையும் பாதுகாத்து அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது எனது கடமையாகும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எமது நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருந்த இன ரீதியான போராட்டத்தினை முடிவுக்கு கொண்டு வந்த நிலையில் மிகவும் நெருக்கமாக வாழ வேண்டிய தமிழ், முஸ்லிம் சமூகத்தினை சில அரசியல் பிற்போக்கு சக்திகளாலும் வெளிநாட்டு டயஸ்போராக்களாலும் தூண்டப்பட்டு மீண்டும் கிழக்கு ஆளுநர் நியமனத்தினை வைத்து குழப்பத்தினை ஏற்படுத்தி அதன் மூலமாக அரசியல் ரீதியாக அனுகூலத்தினை அடையும் நிகழ்ச்சி நிரலை நடத்துவதற்கு முயற்சிக்கின்றனர்.

இதற்கு உள்ளூர் அரசியல்வாதிகளும் சில வெளிநாட்டு சக்திகளும் இதற்கு துணை போவதாக நினைக்கிறேன். கடந்த காலகசப்பான அனுபவங்களைக் கொண்ட இரண்டு சமூகங்களாகிய நாங்கள் பொருளாதார ரீதியாகவும் உயிர் இழப்புக்களையும் சந்தித்த சமூகம்.

ஆகவே மிகவும் அன்புடன் கிழக்கு மாகாண மக்களிடத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் என்ற வகையில் நான் உங்களிடம் வேண்டிக் கொள்வது அறிமுகம் இல்லாத முகப்புத்தகங்கள், வலைத்தளங்கள், இணையத்தளங்களில் வெளிவருகின்ற செய்திகளை பகிர்வதிலும் அதனை ஏனைய மக்களுக்கு அச்சுறுத்துவதன் மூலமாகவும் குழப்பத்தினை ஏற்படுத்தாமல் ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

எதிர்வரும் காலங்களில் மூவின மக்களையும் சரிசமமாக பார்த்து என்னால் முடிந்த சேவையினை எனது காலப்பகுதியில் செய்வேன் என்பதை உறுதியாக குறிப்பிடுவதுடன் எதிர்வரும் நாட்களில் கடையடைப்புக்களையோ ஆர்ப்பாட்டங்களையோ நடத்தி இனங்களுக்கு எதிராக வன்முறைகளை, குழப்பங் களை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளில் யாரும் ஈடுபட வேண்டாம் எனவும் மிகவும் அன்போடு கிழக்கு மாகாண சமூகத்தினை வேண்டிக் கொள்கிறேன்.

அத்துடன் சகல இனங்களையும் சேர்ந்த சமயத் தலைவர்கள், சமூக நிறுவனங்கள், அரசியல் தலைமைகள் அனைவரும் இவ் விடயங்களில் சுமுகமான நிலைமையினை ஏற்படுத்துவதற்கு உதவி ஒத்தாசைகளை வழங்க வேண்டும் என்பதுடன் இம்மாகாணத்தில் மூவின மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு ஏற்றவகையில் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கிறேன் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கோத்தாவுக்கு எதிரான வழக்கு காணி மீட்பு கூட்டுத்தாபன தலைவருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கில் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 17 ஆம் திகதி அவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை சம்பத் அபேகோன் தலைமையில் சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகளின் முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகள் கேட்டுள்ள ஆவணங்கள் சிலவற்றை கண்டெடுக்க முடியாதுள்ளதாக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் சட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த ஆவணங்கள் வழங்குவது தொடர்பில் தீர்க்கமான முடிவைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணைகளுக்காக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என்பதோடு, அவர் வெளிநாடு சென்றுள்ளதாக அவரின் சட்டத்தரணிகள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மன்னார் மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் உண்மைகளும் தோண்டி எடுக்கப்பட வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் வலியுறுத்து

(கொழும்பு)

கூட்டு மனிதப் புதைகுழிகள் தொடர்பில் அதிகம் பேசப்பட்டு வருகின்றது. நாடாளுமன்றில் மண்டைதீவு கிணறுகள் பற்றி பேசப்பட்டது. மன்னார் கூட்டு மனிதப் புதைகுழி தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் எடுத்து, அது தொடர்பில் ஆய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். விடயம் தெரியாத சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் சிறு பிள்ளைத்தனமான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற 2002ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழான கட்டளை-ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுவதற்கான சட்டமூலம் தொடர்பாக உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

செம்மணிபுதைகுழிதோண்டப்பட்டு, அது தொடர்பில் நீதி விசாரணைகளை முன்னெடுத்து, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கு எம்மால் நடவடிக்கைகளை எடுத்திருக்க முடிந்திருந்தது.

அதற்கான அரசியல் பலம் போதியளவு எங்களிடம் இருந்திருந்தது. இன்று அந்தளவிற்கான அரசியல் பலம் எங்களிடம் இல்லை.

அந்த அரசியல் பலத்தை எமது மக்களிடம் இருந்து பறித்து வைத்துக் கொண்டு, இன்று எதிர்க்கட்சியிலிருந்து ஆளுங்கட்சியாக செயற்படுகின்ற தமிழ்த் தரப்பினர் இந்த விடயங்களை இன்றல்ல எப்போதோ முன்னெடுத்திருக்க வேண்டும்.

இதுவரையில் மன்னார் கூட்டு மனிதப் புதைகுழியிலிருந்து சுமார் 282க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், இவை மன்னார் நீதிமன்ற வளாகத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றன.

இப்படியே இவை தொடர்ந்து களஞ்சியப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தால், அவை பழுதடைந்துவிடக்கூடும்.

இவையிடையே பெண்களினதும், 14 சிறுவர்களினதும் என இனங்காணப்பட்ட எலும்புக்கூடுகளும் அடங்குகின்றன என்றும் மேலும், எலும்புக்கூடுகள் - மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருப்பதாகவும், இதுவரையில் புதைகுழியின் முடிவு - எல்லை கண்டு பிடிக்கப்படவில்லை.

இந்த மனிதப் புதைகுழியிலிருந்து தோண்டியெடுக்கப்படுகின்ற மனித எலும்புக் கூடுகளின் காலகட்டம் தொடர்பில் கண்டறிவதற்கென புளோரிடா பீடா கனலிடித் இரசாயனக் கூடம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனித எச்சங்களில் குறிப்பிட்டளவு (சாம்பல்) அனுப்பி காபன் டேரின் ஆய்வு மேற்கொள்வதற்கு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்தாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய நிலையில் இவ்விடயம் தொடர்பில் நம்பிக்கையான தகவல்கள் எதுவும் வெளி வருவதாக இல்லை.

இதனிடையே, இங்கு தோண்டி எடுக்கப்படுகின்ற மனித எச்சங்கள் எந்தக் காலத்திற்குரியவை என்பது குறித்து இங்கு மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் மூலமாகத் தங்களுக்கே ஒரு முடிவுக்கு வர முடியுமென மேற்படி அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிபணர்கள் சிலர் தெரிவித்திருந்ததாகவும், தேவை எனில், காபன் டேரின் ஆய்வின் மூலமாக அதனை மேலதிகமாக ஒப்பிட்டுப் பார்க்க முடியுமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்திருந்ததாகவும் கூறப்பட்டிருந்தன.

எனவே, இதுவும் ஒரு கண்காட்சியாகி விடாமல் மன்னார் கூட்டு மனிதப் புதைகுழி தொடர்பிலான முன்னேற்பாடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு, அங்கு புதைக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட வேண்டும் என்றும், அவர்களின் மரணங்கள் பற்றி ஆராயப்பட்டு, குற்றங்கள் இடம்பெற்றிருப்பின் அவை தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அம்புலன்ஸ் சாரதி மீது தாக்குதல்

# பேசாலை வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று அடையாள பணிப்புறக்கணிப்பு




(மன்னார்)

மன்னார் பேசாலை பிரதேச வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி சாரதியை கடமை நேரத்தில் மூன்று பேர் கொண்ட குழுவினர் தாக்கியதைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை பேசாலை வைத்தியசாலை ஊழியர்கள் ஒருநாள் அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். தாக்குதலுக்கு உள்ளான அம்புலன்ஸ்வண்டி சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம்பற்றி தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பேசாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களை தீவிர சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற அம்புலன்ஸ் வண்டியானது அங்கு நோயாளர்களை அனுமதித்துவிட்டு இரவு 10 மணியளவில் மீண்டும் பேசாலை நோக்கி சென்றுள்ளது.

அந்நேரம்மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் மன்னாருக்கும் தாராபுரத்துக்கும் இடையிலிருந்து ஒரு ஆட்டோவில் வந்த மூன்று பேர் கொண்ட குழுவினர் அம்புலன்ஸ் வண்டியை பின் தொடர்ந்து பேசாலை சவுக்காலைக்கு அருகாமையில் அம்புலன்னஸ் வண்டியை இடைமறித்துள்ளனர்.

இருந்தும்பேசாலை வைத்தியசாலையிலிருந்து இன்னொரு நோயாளியை ஏற்றிச் செல்ல வேண்டியிருந்ததால் அம்புலன்ஸ் வண்டி நிறுத்தாது பேசாலை வைத்தியசாலையை நோக்கி வந்துள்ளது.

ஆனால் ஆட்டோவில் வந்த இந்த இளைஞர்கள் கொண்ட குழுவினர் இவ் வண்டியை பின்தொடர்ந்து பேசாலை வைத்தியசாலைக்கு முன்பாக வந்து அம்புலன்ஸ் வண்டியை மறித்து சாரதியை நையப்புடைத்துள்ளதாகவும் அத்துடன் பொல் ஒன்றினால் சாரதியை தாக்க முற்பட்டபோது அது அம்புலன்ஸ் வண்டிக்கு சிறு சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்புலன்ஸ் சாரதியை நையப்புடைக்கும் சம்பவத்தை அறிந்த வைத்தியசாலை ஊழியர் மற்றும் அருகில் இருந்த பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து தாக்குதலை நடத்திய நபர்களை கைது செய்துள்ளனர்.

அம்புலன்ஸ் வண்டி சாரதி வாகனத்தை செலுத்திக் கொண்டு வருகையில் எதிரே வந்த ஆட்டோவுக்கு டிம் வெளிச்சம் போடாமல் வந்ததே காரணம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பேசாலை பொலிஸார் தாக்குதல் நடத்திய மூவரையும் ஆட்டோவையும் மற்றும் தாக்குதலுக்கு பயன்படுத்திய தடயப் பொருளையும் கைப்பற்றி நீதிமன்றில் ஆஜராக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அதேநேரத்தில் தாக்குதலுக்குள்ளான அம்புலன்ஸ் வண்டி சாரதி பேசாலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

இச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை பேசாலை பிரதேச வைத்தியசாலை ஊழியர்கள் ஒரு நாள் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்ற நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய சம்பவங்கள் இடம்பெற்றன. (2-285)

# சினிமா நடிகர்களுக்கு பொது இடங்களில் சிலை அமைப்பதற்கு அனுமதி அவசியம்

## வவுனியா நகர சபை பிதா தெரிவிப்பு


(பனிக்கன்குளம்)

வவுனியாவில் எம். ஜி. ஆர் நற்பணி மன்றத்தினால் எம். ஜி. ஆர். சிலை அமைப்பதற்கு தர்மலிங்கம் வீதியில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வவுனியா நகரில் பொது இடங்களில் சினிமா நடிகர்களுக்கு சிலை அமைப்பதற்கு நகர சபையின் உறுப்பினர்களின் அனுமதி பெற்றே பொது இடங்களில் சிலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இவ்வாறு நகர உப பிதா சு.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும்தெரிய வருவதாவது,

கடந்த வாரம் வவுனியா நகரசபைக்கு எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தினால் கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதில் நகரின் முக்கிய பகுதியான தர்மலிங்கம் வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் பகுதி முச்சந்தி ஒன்றில் எம்.ஜி.ஆரின் சிலை அமைப்பதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அப்பகுதியில் சிலை அமைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.




இச்சிலைக்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ஒருவர் நிதி வழங்கியுள்ளார். இந்நிலையில் அதனை தடுத்து நிறுத்தியதுடன் நகர சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை குறித்த நற்பணி மன்றம் பதிவு செய்யப்படவில்லை எனவே பதிவு செய்யப்படாத ஒரு மன்றத்தின் கோரிக்கையை நகரசபையினால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது. பள்ளி வாசலுக்கு அருகில் அமைக்கப்படும் இச்சிலைக்கு பெருமளவானர்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து நகரசபை நகர உப பிதாவிடம் தொடர்பு கொண்டு வினவிய போது. அவர்களின் அனுமதிக் கடிதம் கிடைத்துள்ளது. எனினும் எமது சபையில் அவ்விடம் ஆராயப்பட்ட பின்னரே இதற்கு பதில் வழங்க முடியும். இதை விடுத்து அப்பகுதியில் அனுமதியற்ற விதத்தில் சிலை அமைப்பதற்கு அனுமதிக்க முடியாது. அத்துடன் வவுனியா பொது இடங்களில் நடிகர்களுக்கு சிலை அமைப்பதற்கு சபையின் உறுப்பினர்களின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறான இடங்களில் தமிழ் அறிஞர்கள், புலவர்களின் சிலையை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே இவ்வாறு எம்.ஜி.ஆரின் சிலை அமைப்பதாக செய்திகள் பரவியதும் நடிகர் விஜயின் ரசிகர்களும் தமது தலைவரின் சிலையை அமைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)




# குப்பை வாளியினுள் வீசப்பட்ட கழிவுகளினுள் கோழிக்கழிவுகள்



(பனிக்கன்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் வீசப்பட்டுள்ள குப்பைகளில் கோழிக் கழிவுகள் காணப்படுவதாகவும் இதனால் வர்த்தக நிலையங்களில் துர்நாற்றம் வீசுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதி வைக்கப்பட்டிருந்த குப்பை வாளியில் வீசப்பட்டுள்ள குப்பைகளில் இவ்வாறு கோழிக்கழிவுகளும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பேருந்து நிலையப்பகுதியிலுள்ள வியாபார நிலையங்களில் துர்நாற்றம் வீசிவருகின்றது. பல்வேறு தேவைகளுக்காக இப்பகுதிக்கு வருபவர்கள் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

நகரசபை ஊழியர்கள் குப்பை வீசுவதற்கு வாளிகளை வைத்துள்ளபோதிலும் அதனை மூடிவைப்பதில்லை என்றும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (2-281)

## கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகள்

# 100 முன்பள்ளி சிறார்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கினர்





(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி சிறார்கள் 100 பேருக்கு கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகளின் ஏற்பாட்டில் உலருணவுப் பொருட்களும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற உத்தியோகத்தர்கள்,சிறைச்சாலை உத்தியோகத்தர்கள்,சமூக சேவையாளர்கள்,சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து சிறார்களுக்கு இந்த உதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

இதில் சட்டத்தரணிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,முன்பள்ளி ஆசிரியர்கள்,பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# படையினரால் வீடு அமைத்து கையளிப்பு

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட விசுவமடு மாணிக்கபுரம் பகுதியில் வசித்து வந்த வயோதிப தாயார் ஒருவருக்கும் அவரது பராமரிப்பில் பெற்றோரை இழந்து வாழ்ந்து வந்த சிறுமி ஒருவருக்குமாக 5.5 இலட்சம் ரூபா செலவில் படையினரால் வீடு ஒன்று அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.



வீட்டுத்திட்டம் எதுவும் கிடைக்காத நிலையில் தற்காலிக கொட்டிலில் வாழ் ந்து வந்த இருவரும் கடந்த மழை வெள்ளத்தினால் இவர்களின் தற்காலிக கொட்டில் முற்றாக பாதிக்கப்பட்ட நிலையில் கிராம அபிவிருத்தி சங்கம் 57 ஆவது படைப்பிரிவினருடன் தொடர்பு கொண்டு கேட்டதற்கு இணங்க வீடு ஒன்றை 57 ஆவதின் 2ஆவது படைப் பிரிவின் 6ஆவது சிங்க றெஜிமன்ட் பிரிவினரால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

வீடு அமைப்பதற்கான நிதி உதவியை தெற்கை சேர்ந்த சித்தார்த்த பதனம் என்ற பௌத்த சங்கம் உதவி வழங்கியுள்ளது. (2-281)

# கிரவல் மண் ஏற்றி பயணித்த டிப்பர் வாகனங்கள் கைப்பற்று

## சாரதிகள் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி சட்டவிரோதமாக கிரவல் மண் ஏற்றிச்சென்ற மூன்று டிப்பர் வாகனங்களை நேற்று பொலிஸார் கைப்பற்றியதுடன் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

செட்டிகுளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியூடாகப் பயணித்த டிப்பர் வாகனங்களை பொலிஸார் சோதனைக்குட்படுத்திய போது, கிரவல் மணல் ஏற்றுவதற்கான அனுமதியின்றி கிரவல் மண்களை ஏற்றிச்சென்ற மூன்று டிப்பர்களை பொலிஸார் கைப்பற்றியதுடன் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.(2-281)

# வெடுக்குநாறிமலை பிரச்சினை தொடர்பில் ஆய்வை மேற்கொண்டு தரவுகளைத் தருக!

## ஜனாதிபதி செயலகம் பணிப்பு



(குருமன்காடு)

ஜனாதிபதி செயலகம் மற்றும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைவாகவே வெடுக்குநாறிமலையை ஆய்வு செய்வதாக வவுனியா மாவட்டத்தின் தொல்லியல் திணைக்களத்தின் , அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறிமலையை ஆய்வு செய்யும் நோக்கில் கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் தொல்லியல் நிபுணர்கள், வவுனியா மாவட்ட தொல்லியல் திணைக்களத்தினர், நெடுங்கேணி பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் வருகை தந்து தற்போது ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த ஆய்வு செய்வதை இடைநிறுத்தச்சென்ற ஆலய நிர்வாகத்தினருக்கும் தொல்லியல் திணைகளத்தினருக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதன்போதே குறித்த திணைக்கள அதிகாரி இதனை தெரிவித்தார்.

நீண்டகாலமாக வெடுக்குநாறிமலையின் பிரச்சினை தொடர்கின்றது. இதனால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாமல் பிரதேச மக்கள் இருக்கின்றார்கள் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஜனாதிபதி செயலகத்திற்கு தெரியப்படுத்தியிருக்கின்றார்.

அதனடிப்படையில் ஜனாதிபதி செயலகம் தொல்லியல் திணைக்களத்தினரை உடனடியாக ஆய்வை மேற்கொண்டு தரவுகளைத் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கு அமைவாகவே இந்த ஆய்வை மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக தற்போது வெடுக்குநாறி மலையில் காணப்படும் கல்வெட்டின் எழுத்துக்களை பிரதி எடுக்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (2-250)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், தைத்த சீருடைகள் வழங்கிவைக்கப்பட்டன




(பனிக்கன்குளம்)

புலம்பெயர் மக்களின் நிதி உதவியுடன் BLUES அபிவிருத்தி அமைப்பினால் மன்னார் கணேசபுரம் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு இவ்வருடத்திற்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் தைத்த பாடசாலை சீருடை என்பன அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பாடசாலைக்கு இவ்வாறான கற்றல் உபகரணம் மற்றும் தைத்த சீருடைகள் என்பன வழங்கப்பட்டன.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணம் பொலிகண்டி பகுதியில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 42 மாணவர்களுக்கும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விசுவமடு மேற்கு நெத்தலியாறு பகுதியிலுள்ள 375 மாணவர்களுக்கும் அவர்களின் கல்வித் தரத்திற்குத் தேவையான அனைத்து கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# வவுனியாவில் இருவேறு சம்பவங்களில் 8 கிலோ கேரள கஞ்சாவுடன் மூவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் இருவேறு சம்பவங்களில் 8 கிலோ கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மூன்று நபர்களை வவுனியா பொலிஸார் கைதுசெய்துள்ளதாக தெரிவித்தனர்.

கடந்த 7 ஆம் திகதி காலை வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாக சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வவுனியா பொலிஸ் நிலைய போதைத்தடுப்பு பிரிவினர் யாழில்இருந்து திருகோணமலை நோக்கி பயணித்த பேருந்தில் சோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது பை ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 4 கிலோ கேரளகஞ்சாவை கைப்பற்றியதுடன் அதனை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த இருவரை கைது செய்தனர்.

அதேவேளை அன்றையதினம் இரவு யாழில் இருந்து தியத்தலாவை நோக்கி சென்ற பேருந்தை நொச்சிமோட்டை பகுதியில் வழிமறித்த பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டபோது பைஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட 4 கிலோ கேரளக்கஞ்சாவை கைப்பற்றியதுடன் அதனை உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வவுனியா மகாறம்பைகுளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரை கைது செய்ததாகவும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில். வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# மஹோற்சவம்

(வவுனியா)

வவுனியா ஸ்ரீ கந்தசாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் மஹோற்சவம் நடைபெறும். தேர்த்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

தீர்த்தத் திருவிழா மறுநாள் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 1008 சங்காபிஷேகம் காலை 8.30 மணிக்கு இடம்பெற்று திருக்கல்யாணம் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும். (2)

# பெரிய பரந்தன் கிராமமக்களுக்கு நல்லினப் பழமரங்கன்றுகள் வழங்கல்





(கிளிநொச்சி)

கிளிநொச்சி பெரியபரந்தன் கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தினால் பெரியபரந்தன் கிராம மக்களுக்கான நல்லினப் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

பெரியபரந்தன் கிராம மக்களுக்கான நல்லினப் பழமரக்கன்றுகளை பெரிய பரந்தன் கமக்கார அமைப்பினர் நேற்று முன்தினம் காலை வழங்கி வைத்தனர்.

இந் நிகழ்வில் பெரிய பரந்தன் கமக்கார அமைப்பின் தலைவர் சு.யதீஸ்வரன் மற்றும் செயலாளர், கிராம உத்தியோகத்தர், கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மக்களுக்கு வழங்கி வைத்தனர்.(2)




# மாணவர்கள் கௌரவிப்பும் நினைவுச்சின்னம் வழங்கலும்



(பூநகரி)

பூநகரி பிரதேச சமுர்த்தி வங்கிக்குட்பட்ட பிரிவுகளில் உள்ள 42 மாணவர்களுக்கு பணம் வைப்பிலிடப்பட்ட வங்கிப் புத்தகங்கங்கள், வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றியீட்டிய 10 பேருக்கான நினைவுச் சின்னம் வழங்கலும் தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற மூன்று மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஆருணி தவபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். (2)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் உபகரணங்கள் வழங்கல்

(கண்டாவளை)

இயக்கச்சி கோவில்வாயல் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் அலுவகை பாவனைக்கான உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. இயக்கச்சி வட்டார பிரதேச சபை உறுப்பினர் தவராசா ரமேஷின் வேண்டுகோளிற்கு இணங்க பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் குறித்த நிதி ஒதுக்கப்பட்டது.

குறித்த உபகரணங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், கட்சியின் விளையாட்டு இணைப்பாளர் ரஜிதன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (2-315)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(வவுனியா)

அகில இலங்கை சமாதான நீதவானாக இராசதுரை கிருபாகரன் 30.11. 2018 இல் வவுனியா மாவட்ட நீதிபதி றியாழ் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யாழ்.புங்குடுதீவு மகா வித்தியாலயம், முல்லை. யோகபுரம் மகா வித்தியாலயம் மற்றும் முல்லை. மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவனும் கல்விக்கான கரங்கள் அமைப்பு மல்லாவி, பழைய மாணவர் சங்கம், மல்லாவி மத்திய கல்லூரி ஆகியவற்றின் பொருளாளரும் மல்லாவி வணிக மன்ற முன்னாள் செயலாரும் துணுக்காய் ப.நோ. கூ.சங்க பொதுச்சபை உறுப்பினரும் ஆவார்.(2)

# சினிமா திரையரங்கில் அடிதடி

(குருமன்காடு)

வவுனியா கண்டிவீதியில் அமைந்துள்ள சினிமா திரையரங்கில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற அடிதடியில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர் பாக மேலும் தெரியவருவதாவது.தென்னிந்திய திரைப் படநடிகரான அஜித்குமார் நடிப்பில் வெளிவந்துள்ள "விசுவாசம்" திரைப்படத்தை காண்பதற்காக அன்றிரவு 9 மணியளவில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் வவுனியாவிலுள்ள திரையரங்கு ஒன்றின் முன்பாக ஒன்று கூடியிருந்தனர்.

திரைப்படத்தை காண்பதற்கான நுழைவுச்சீட்டை கொள்வனவு செய்வதற்காக வரிசையில் நின்ற இளைஞர்களுக்கிடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அது வாக்குவாதமாக உருவெடுத்து அடிதடியாக மாறியது.

குறித்த சம்பவத்தில் சினிமா பாணியில் மது போத்தல்கள், தலைகவசங்களால் குழுக்களாக பிரிந்து இளைஞர்கள் அடிதடியில் இறங்கினர்.இதனால் கண்டி வீதியின் போக்குவரத்து சிறிது நேரம் பாதிப்படைந்திருந்தது.சம்பவத்தில் பலர் காயமடைந்தபோதும் ஒருவரே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-250)


# நன்றி கூறுகின்றேன்

## ஜெகதீஸ்வரன் நிறைநெஞ்சன்

(க.பொ.த. உயர்தரம் கணித பிரிவு /முல்லைத்தீவு மாவட்டம் 3A, மாவட்ட நிலை-1)

கடந்த கால நினைவலைகளை புரட்டிப் போடுவதற்கும் எதிர்கால இலக்கை அடைவதற்கும் அன்னையின் வழிகாட்டலின்கீழ் கல்விப் பாதையை தொடர்கையில் எனக்குக் கிடைத்த பேறு இதுவாகும்.

எனது உயிரைத் தனதுயிராகக் கொண்டு பல கஷ்டங்களுக்கு மத்தியில் என்னை வளர்த்து ஆளாக்கிய என் அம்மாவுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது இளமைக்காலக் கல்விக்கு வழிகாட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி ஊட்டிய கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பிரமந்தனாறு சமூகத்துக்கும், க.பொ.த.உயர் தரத்தை திறம்பட கல்வி கற்க உதவிய மு/விஸ்வமடு மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் விஸ்வமடு கல்விச் சமூகத்துக்கும், உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்கு கைகொடுத்த விஸ்வமடு விஞ்ஞானக் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் எனது கல்வி நடவடிக்கையை சீராகச் தொடர்வதற்கு உதவிய அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இதேபோல் உங்களது பெற்றோரின் வழிகாட்டலின் கீழ் உங்களது ஆசிரியர்கள் மீது நம்பிக்கையும் மரியாதையும் பேணுவதன் மூலம் நல்லதோர் நிலையை அடைய முடியும். (அ)



பா. யுகான்- 191

# பிறைற் கல்வி நிலை


BRIGHT EDUCATION CENTRE KILINOCHCHI

தரம்-5 புலமைப்பரிசில் வெற்றியாளர்கள் கௌரவிப்பு- 2017, 2018

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் 12.01.2019 சனிக்கிழமை காலை 8.3




க.நேசிகா-187 பி.பிறேமினி-186 வி.கலைமாறன் -184 சி.மகிழன்பன் -182 க.பருதிமாறன்-180 கோ.கனிமொழி-178 ஞா.சுவேதா-178 ஆ.சஞ்சயன்-178 பு.லாவண்ஜா-177 க.பரிதிவேந்தன்-176 ஞா.



ஹெ.ஒலின்ராசங்கரி-168 சி.கரிஸ்னா-167 ஜெ.புரட்சியன் -167 கு.தர்மிகன்-166 ர.இயலவன் -165 நி.தருஸ்சன்-165 ஜெ.சௌமிதா-165 அ.ஆரபி-165 கோ.பிரணவன்-165 மா.சஞ்சீவன்-164 சி.கோ



த.அட்சயன் -161 அ.அபிசன் -161 ஜ.சாதனா-160 சு.கிருசாந் -159 சு.திகழவன் -159 சி.ஜிசானி-158 த.நியூறா-157 ச.அதியன் -155 மோ.கம்சிகன் -153 வி.கிருஜன் -153 வி.செ



த.கவிப்பிரியா-148 ஜெ.திருவாணன்-145 சி.சலோமிசிவசுதா-145 தெ.பிருந்தாபன்-144 வி.கர்ணியா-143 சி.குயின்சா-143 த.தினோசன்-142 கு.தக்சினி-141 சு.யதுர்சிகன் -141 பி.துளசி-141 லோ.



ந.கனிநிலா-129 சி.தமிழ்விழி-126 உ.புகழ்வேந்தன் -126 ச.தணிகை-126 கி.சங்கோதயன் -124 த.தர்சனா-123 மு.கனிமருதன் -121 பி.திவ்வியலக்ஸ்மி-116 சு.மலரவன் -116 நி.தாங்கி-116 ச.அ



அ.அக்குமரன்-182 க.தனுசியன் -180 நி.துவாரகன் -179 சி.ஆர்வலன் -179 கி.வித்தகி-178 த.தமிழ்நிலவன்-177 இ.கலையரசன் -176 சி.பிறைநிலவன்-176 சி.அருணவி-175 ஜெ.தமிழ்வாணி-174 சி.பு



ர.நிலவரசன்-165 த.தெய்வீகன்-165 வி.மகிழினி-164 கி. மகிழ்கனி-162 ஏ.கலைநிலா-162 சு.விதுர்சிகா-161 சு.யானுசா-161 சு.ஹரிப்பிரசாத் -160 க.சுடர்மறவன்-160 பி.பிரணவன்-160 பா.த



ஜே.பரிதிவாணன் -151 ஜெ.அர்ச்சனன்- 151 ச.ஆரணி-149 ஜே.ஆர்த்தி-149 ஸ்ரீ.திகழினி-149 மு.வைகா-147 சு.வினோஜா-147 ந.சாரங்கி-146 கே.இந்துகா-143 தி.விழியழகன்-143 ப.கீர



கே.நமீதா-139 சி. கலைக்கதிர்-134 சி.மிருணாளினி-132 கோ.தமிழ்மதி-127 தி.கிஷோதா- 127 ப.சதாங்கன் -125 ப.சதுர்சன்- 125 ச.மகிசா-116 ஆ.எழிலழகி-116 சு.ராகநிலா-114 பா.



2018 தரம் 9
மாகாண
மட்டப்
பெறுபேறு



சி.கிருத்திகா-10AB ர.ரேணுஜா-10AB த.யுரேக்கா-10AB இ.சாரங்கன்-10AB கே.பங்கயன்-9A2B த.ரெமிக்சன்-9A2B சி.ருஷீனா-9A2B கி.வியூகன்-9A2B தோ.டிலக்சிகா-9ABC க.மேதகையன் 11A ஜெ.அனோஜன் 11A

# லையம் - கிளிநொச்சி

வாழ்த்துவோர்:


2018

ல 8.30 மணி

பிறைற் கல்வி நிலையம், விழா ஏற்பாட்டுக் குழுவினர்.



சி.சுகன்யா- 191



-176 ஞா.அர்தனா-174 த.அட்சனா-174 ற.விண்ணிலா-174 சே.பகவன்-173 கே.துசாதனன் -171 ஜெ.ஸ்ரீவைஷ்ணவி-170 கோ.பேரரசி-169 தி.தனிசா-169 லோ.கபிநயா-168 லோ.சதுர்சிகன்-168



2018 தரம் 5 புலமைப் பரிசில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்


164 சி.கோரூபன் -165 அ.மகிழினி-163 ஜ.நர்த்தனா-163 தி.லதுசானி-162 ச.வித்தகன்-162 அ.நர்மிதன் -162 த.அபிசனா-162 சு.எழிலிசை-162 ர.கிருசாளினி-161



63 வி.செந்தூரிகா-152 ர.மகிழினி-152 ஏ.கலைமகள் -151 பா.கவியாளினி-151 தே.கேசிகா-151 சு.மோகிதன் -151 சோ.கோபிதா-151 தே.தரணிகன்-149 ச.கனியகன் -149 ஜெ.அபிலோசினி-149



1 லோ.அகலிகா-141 ந.சுபிக்சன் -140 ஜெ.தமிழ்க்கலை-138 லி.கிருசாந் -135 அ.றோகிதன் -134 சு.டலைக்சன்-134 த.தமிழ்நிலா-132 ஜெ.ஜெகதாரகா-131 கே.மதியழகன் -130 வி.தமிழ்விழிதன் -129



2018 தரம் 5 புலமைப் பரிசில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

6 ச.அஜந்தன் -116 ச.கபின்ஸ்-116 ம.செமுவல்-116 பு.விதுர்சனா-107 ந.சாருஜன் -102 சா.இசையன்பன் நி.நிதுசனா ம.விதுனன் -182 சி.மயூரதன் -182



-174 சி.புவியரசி-174 ம.கோபிதன்-172 கி.பானுஜன் -170 ம.மகிழருவினி-170 சா.சங்கவி-169 சு.நிலாமதி-168 சி.மகிழினி-168 இ.அகல்வண்ணன்-166 ச.அருண் -166 ர.சுடர்விழி-164



2017 தரம் 5 புலமைப் பரிசில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

60 பா.தணிகை-159 க.கோநிலா-159 கா.துவாரகன்-158 ந.துளசிகன்-157 க.கயல்-155 கா.சைரோசன்-154 இ.தமிழ்க்குமரன்-154 அ.அனுசியா-153 க.யசிவன் -153



43 ப.கீர்த்திகா-143 க.சரமி-141 சு.இயலினி-141 நி.மலரவன்-140 ஜெ.ஆத்மீகன்-140 இ.தமிழினி-139 ர.இலக்கியா-139 க.கஜானனன்-139 க.ருக்சன்-138 ஜெ.அபிநயன -138



2017 தரம் 5 புலமைப் பரிசில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

4 பா.துவாரகா-120 யோ.ராஜினி-110 ஜெ.கௌதமன் -110 சி.சிறிநிலவன்-103 ந.புவிதரன் -107 ர.கயல்விழி ர.ரசிக்கா வ.வசீகரன்-11A கு.சயந்தன் -11A




2017 தரம் 9 மாகாண மட்டப் பெறுபேறு

ாஜன்-11A வி.யோகதுலக்சிகா-11A வி.சங்கீதா-11A பி.சாம்பவி-11A அ.அலெக்ஸ்-10AB சி.சதுர்சா-10AB ம.தரங்கினி-10AB ஜே.ஜேஷ்துஷா10AB இ.யுவாஜினி-10AB க.சாகித்தியா-9A2B கி.குமணன்-9A2B

# ‘பெருந்தோட்ட கம்பனிகளின் தீர்மானத்தை ஏற்க முடியாது’

## இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் நிராகரிப்பு



(கொழும்பு)

பெருந்தோட்ட கம்பனிகளின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

தொழில், தொழில் சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 600 ரூபாவுக்கு மேல் அதிகரிக்க முடியாது எனக் குறிப்பிட்டு வந்த பெருந்தோட்டக் கம்பனிகள் இன்று 625 ரூபாவைப் பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளது. ஆனால் இந்தத் தொகையை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோன்று தற்போது 25 ரூபாவாக அதிகரித்துள்ளதைப் போன்று தவணை அடிப்படையில் அடிப்படைச் சம்பளத்தொகை அதிகரிக்கப்படுமென்றும் அடுத்த வருடம் 650 ரூபாவாகவும் அதற்கு அடுத்த வருடம் 675 ரூபாவாகவும் எதிர்பார்த்துள்ளதாக முதலாளிமார் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கு மாறாக முதல்வருடம் 650 ரூபாவாகவும் அதற்கு அடுத்த வருடம் 700 ரூபாவாகவும் அதிகரிக்கப்படுமானால் கோரிக்கைக்குச் சாதகமான தீர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமையும். இதனையே கலந்துரையாடல்களின்போதும் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

இந்தத் தொகையை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் இது தொடர்பில் அனைவருடனும் கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது. அனைவருடனும் கலந்துரையாடி பின்னர் மிக விரைவில் முதலாளிமார் சம்மேளனத்துடனான அடுத்த கட்ட பேச்சுவார்த்தையை முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்திரிகாவிற்கு அழைப்பில்லை! தயாசிறிக்கு பியதாஸ வாழ்த்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட தயாசிறி ஜெயசேகர நேற்று முன்தினம் கட்சித் தலைமையகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் உப தலைவர் நிமால்சிறிபால டி சில்வா, முன்னாள் பொதுச் செயலாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ, பேச்சாளர் மகிந்த சமரசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் பொதுச் செயலாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தயாசிறிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, சுதந்திரக் கட்சிக்கான தனது சேவை தொடரும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்விற்கும் சுதந்திரக் கட்சியின் போசகரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# வடக்கு - கிழக்கு ஆளுநர்கள் நியமனம் நம்பிக்கையூட்டும் புதியதோர் அத்தியாயம்

## முன்னாள் அமைச்சர் ஹஸன் அலி வரவேற்பு

(ஏறாவூர்)

தமிழ்பேசும் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அவர்களின் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் முதன்முறையாக ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க முன்னேற்றமாகும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹஸன்அலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் மாகாண சபை ஆட்சிமுறை 1987 இல் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரையில் கடந்த 31 வருடங்களாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே இப்பதவிகளில் அமர்த்தப்பட்டு வந்துள்ளனர்.

அந்த நிலைமை தற்போது மாறுபட்டுள்ளதனை நோக்கும்போது நம்பிக்கையூட்டும் புதியதோர் அத்தியாயம் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இணைக்கப்பட்டுள்ளதாகவே ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கருதுகின்றது. அதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

இலங்கையில் வாழும் சகல இனங்களினதும் சம்மதத்துடன் முழுமையானதோர் அரசியல் யாப்பானது சட்டரீதியாக நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வரும் வரை, சிறுபான்மை இனங்களின் வாழ்வுரிமை, தனித்துவ அடையாளம், இருப்பு என்பனவற்றைப் பாதுகாத்துக் கொள்ளவும் உறுதிப்படுத்திக் கொள்ளவும் தேவையான 22 முக்கிய அம்சங்களை இடை நிலை காப்பீடாக அடையாளம் கண்டு அவற்றை அண்மையில் காத்தான்குடியில் வெற்றிகரமாக நடந்து முடிந்த அதன் பேராளர் மாநாட்டில் ஐக்கிய சமாதான முன்னணி நிறைவேற்றியிருந்தது. அந்தப் பட்டியலில் 12 ஆம் மற்றும் 13 ஆம் தீர்மானங்கள் வடக்கு-கிழக்கு மாகாணசபை நிர்வாக நடைமுறை சம்பந்தப்பட்டவையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# பிளவடைந்துள்ள சுதந்திரக்கட்சியை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்

## தயாசிறிக்கு நிமால் ஆலோசனை

(கொழும்பு)

தனிப்பட்ட விருப்புக்களின் அடிப்படையில் செயற்படாது பிளவடைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்காகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

அத்தோடு மிகவும் நெருக்கடியான சூழலில் பொதுச் செயலாளராகப் பதவியேற்றிருக்கும் நீங்கள் கட்சியைக் கட்யெழுப்புவதையே பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டும் என சுதந்திரக்கட்சியின் உப தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா தயாசிறி ஜெயசேகரவுக்கு ஆலோசனை வழங்கினார்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரா்க நியமிக்கப்படுள்ள தயாசிறி ஜெயசேகர நேற்று முன்தினம் வியாழக்கிழமை கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## காந்த ஈர்ப்பு விசை

நிலாவுக்கும் பூமிக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று சொன்னால் அதை நீங்கள் நம்புவீர்கள்! ஆனால் நிலாவுக்கும் நமது வயிற்றுக்கும் சம்பந்தம் இருக்கிறது என்று சொன்னால் அதை நீங்கள் நம்புவீர்களா? நான் சொன்னால் சந்தேகப்படுவீர்கள்.

இல்லினொய்ஸ் பல்கலைக்கழகத்திலுள்ள ஒரு ஆராய்ச்சியாளர் இதைச் சொல்கிறார். அவர் பெயர் Proof Ralph Morris. அந்தப் பேராசிரியர் 5 வருடமாக ஒரு ஆராய்ச்சி செய்தார்... 100 பேருக்கு மேல் சோதனையும் செய்து பார்த்தார்... அப்படிச் செய்து பார்த்து விட்டு சொல்கிறார்... “வயிற்று வலிக்கும் நிலாவுக்கும் சம்பந்தம் இருக்கிறது!” அதாவது இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் அல்சருக்கும் பௌர்ணமிக்கும் சம்பந்தம் இருக்கிறது என்கிறார் அவர்!

அவர் பல பேரைச் சோதனை செய்து பார்த்தார் அல்லவா? அவர்களுக்கு எல்லாம் மார்புவலி, Ulcer Bleeding இது எல்லாம் பௌர்ணமி காலத்தில் அதிகமாக இருக்கிறதாம்!

அதுசரி...2 1/2 இலட்சம் மைலுக்கு அப்பால் இருக்கும் அவ்வளவு பெரிய நிலாவுக்கும் இங்கே இருக்கும் சிறிதளவு வயிற்றுக்கும் எப்படிச் சம்பந்தம் இருக்க முடியும்?

அதற்குக் காரணம் என்ன என்று அவரே சொல்லியிருக்கிறார். “Magnetic Interaction between the Earth and the Moon” அதாவது பூமிக்கும்நிலவுக்கும் இடையேஏற்படக் கூடிய காந்த ஈர்ப்பு சக்தி தான் அதற்குக் காரணமாம்!

மனிதனின் உடம்பையும் மனதையும் இந்த சக்தி பாதிக்கிறதாம்! காந்த சக்தி என்றால் அது இரும்பைத் தான் பாதிக்கும்! உடம்பை எப்படிப் பாதிக்கும்? மனிதன் உடம்பிலேயும் இரும்பு இருக்கிறது... அதனால் அந்த ஈர்ப்புசக்தி நமது உடம்மைப் பாதிக்கிறது! இதை நிரூபிப்பதற்கு ஒரு சோதனை கூட செய்து பார்த்திருக்கிறார்கள்! எப்படி என்றால்...

முதலில் ஒரு கூண்டு தயார் செய்தார்கள்! அந்தக் கூண்டுக்குள்ளே ஒரு எலியைப் பிடித்து விட்டார்கள்! அந்த எலி சுத்திச் சுத்தி ஓடியது! காந்த சக்தியை அந்தக் கூண்டுக்குள்ளே உண்டாக்கினார்கள்! உடனே அந்த எலியிடம் ஒரு மாறுதல்.

ஒது யோசனை செய்கிறது! மயங்கி நிக்கிறது! சுத்தி ஓடுவது குறைகிறது! இதில் இருந்து என்ன தெரிகிறது! காந்தம் உண்டாக்கக்கூடிய ஈர்ப்பு சக்தி அந்த எலியினுடைய உடம்பையும் மனதையும் பாதிக்கிறது!

இதே மாதிரித்தான் பூமிக்கும் நிலவுக்கும் இடையிலே ஏற்படக் கூடிய காந்தசக்தி மனிதனுடைய உடம்பையும் மனதையும் பாதிக்கிறது! எங்கள் ஊரில் ஒரு பாட்டி இருந்தார்! அவர் அப்போதே சொல்வார்! அமாவாசையில் மருந்து சாப்பிடாதே! வௌர்ணமியில் மருந்து சாப்பிடாதே என்று! அதையெல்லாம் யாரும் கேட்பதில்லை!

பலபேர் அமைவாசையன்று வயிற்றுக்கு “ரெஸ்ட்” கொடுப்பது இப்பவும் வழக்கமாகத்தான் இருக்கிறது! இப்போது உள்ள டாக்டர்கள் “கெடு” வைப்பது உண்டு! இன்னும் ஒரு 24 மணி நேரம் தாண்டினால் தான் எதையும் உறுதியாகச் சொல்ல முடியும்! அந்த நேரம் தாண்டி விட்டால் நோயாளி ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டார் என்று அர்த்தம்!

இதே மாதிரி அந்தப் பாட்டியும் கெடு வைப்பார்கள்! “என்ன பாட்டி! அந்த ஆள் பிழைக்குமா” என்று கேட்டால் “எதற்கும் இந்த அமாவாசை தாண்டட்டும் அதன் பின்னர் சொல்கிறேன்” என்பார்!

இப்படிப் பல பேருக்குக் கெடு வைத்துக்கொண்டிருந்த அந்தப் பாட்டியையே ஒரு அமாவாசை வந்து அழைத்துக்கொண்டு போய் விட்டது! பூமிக்கும் நிலவுக்கும் இடையிலே இருக்கக்கூடிய காந்தசக்தி மனிதனுடைய மனதையும் பாதிக்கிறது!

இதை மனோதத்துவ டாக்டர்களே ஒத்துக்கொள்கிறார்கள்! புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள் அதுமாதிரி நேரத்தில் வழக்கத்தைவிட கொஞ்சம் அதிகமாக நடந்து கொள்வார்களாம்! வழக்கமாக என்னை வந்து பார்க்கும் ஒரு சிநேகிதன் ஒருநாள் வரவில்லை!

மறுநாள் அவனைப்பார்த்து “ஏன்டா நேற்று என்னை வந்து பார்க்கவில்லை” என்றேன்! “நேற்று வௌர்ணமி! அதனால் உன்னிடம் வர வேண்டாம் என்று கொஞ்சம் ஒதுங்கியிருந்தேன்” என்றான்!

# மாணவனின் உயிரைப் பறித்த பாடசாலைக் கட்டடத் தூண்




(அநுராதபுரம்)

அநுராதபுரம் - பலாகல பிரதேசத்தில் புதுகெனெ மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டுக் கட்டடத்தின் தூண் மாணவன் ஒருவரின் தலையில் விழுந்த நிலையில், குறித்த மாணவன் உயிரிழந்துள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுகேஹிந்த பிரதேசத்தைச் சேர்ந்த பசிது கிரஜான் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள நிலையில் பாடசாலையில் விளையாட்டில் திறமையான மாணவன் என பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை நேரங்களுக்கு பின்பு கூடைப்பந்து மற்றும் கால்பந்து விளையாட்டுக்கான பிரத்தியேகப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு மைதானத்தில் குறித்த மாணவன் நின்றபோது அதன் அருகில் இருந்த கொங்கிரீட் தூண் சாய்ந்து விழுந்ததில் குறித்த மாணவன் உயிரிழந்துள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயங்களுக்குள்ளான மாணவன் ஆபத்தான நிலையில் கலேவெ பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போதே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த பாடசாலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஏனைய தூண்களை பெற்றோர்கள் அப்புறப்படுத்திய நிலையில் குறித்த பாடசாலைக்கு ஊடகவியலாளர்கள் வந்தபோது விளையாட்டு கட்டடத்திற்காக அமைக்கப்பட்டிருந்த தூண்கள் உறுதியற்ற நிலையில் உள்ளதை அறிந்து குறித்த விடயம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை புதிய ஆளுநர் சரத் ஏக்கநாயக்க, குறித்த மாணவனின் மரணம் தொடர்பான விசாரணையை விரைவில் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார். (இ-7)

# மாணவர்களுக்கு கல்வியமைச்சு வழங்கும் சுரக்ஷா காப்புறுதி பெறுமதித்தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட சுரக்ஷா காப்புறுதித் திட்டம் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த வருடம் மாணவர்களுக்கு சுரக்ஷா காப்புறுதி வழங்கும் போது பெறப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் குறைந்த மட்ட செலவைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு அதிகளவிலான பிரதி பலன் கிடைக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டுக்கு புதிய யோசனைகளை உள்ளடக்குவதற்கு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் விதிகாட்டலின் கீழ் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் பிரகாரம் 2019 ஆம் வருடத்தில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்கு 2 இலட்சம் ரூபாவும், அரச வைத்தியசாலைகளிலோ அல்லது அரச ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தாத சிகிச்சை அறையில் சிகிச்சை பெறும் போது 3 ஆயிரம் ரூபா தினக் கொடுப்பனவாக வழங்கப்படும் வெளிப்புற சிகிச்சை பெறும் போது 20 ஆயிரம் ரூபா வழங்கவும் மாணவர்களது பெற்றோர் அல்லது பொறுப்பாளர்கள் உயிரிழக்கும் போது ஒரு வருக்கு 2 இலட்சம் ரூபாவும் மாணவர் உயிரிழக்கும் போது மரண சடங்கு ஏற்பாடுகளுக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் நிரந்தர பாதிப்புக்குள்ளான வர்களுக்கு வருடாந்தம் 50 ஆயிரம் முதல் 2இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பிரதி பலன்கள் கிடைக்கும்.

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்ட சலுகை தொகை

| காப்புறுதிக்கான வாய்ப்பு | 2018 - 2019 |
|---|---|
| வைத்தியசாலை பிரதிலாபம் | |
| • வதிவிட சிகிச்சை பிரதிலாபம் | 200,000- 200,000 (அரச,தனியார்) |
| • அரச வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற(நாளாந்தம்) | 1000 - 3000 |
| • வெளி சிகிச்சை பிரதிலாபம் | 10000- 20 000 |
| விபத்தின்போதான பிரதிலாபம் | |
| • நிரந்தமாக பாதிப்பு | 100,000- 200,000 |
| | 50,000-100,000 50,000-200,000 |
| உயிரிழப்பு | |
| • பெற்றோர்களின் உயிரிழப்பு | 75000- 200,000(ஒருவருக்கு) |
| • மாணவனின் உயிரிழப்பின் போது | 100,000- 150,000 |
| • சுகப்படுத்த முடியாத நோய் (அல்லது அதற்கு மேல்) | 200,000 |

(இ-10)

# ஹிஸ்புல்லாவுக்கு எதிராக மட்டக்களப்பில் ஹர்த்தால்

(ஏறாவூர்)

மட்டக்களப்பில் கிழக்கு மக்கள் ஒன்றியம் பெயரில் துண்டுப் பிரசுரம் மூலம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மட்டக்களப்பு நகரில் பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்ததுடன் போக்குவரத்து சேவைகள்வழமை போன்று இடம்பெற்றன.

இதேவேளை மட்டக்களப்பு சந்தை, வைத்தியசாலைகள்வழமை போன்று இயங்கியதுடன் மக்கள் மிகக்குறைவாகவே அங்கிங்களில் காணப்பட்டனர்.

மற்றும் இங்குள்ள பாடசாலைக்கு ஒருசில மாணவர்கள் மாத்திரம் சென்றதுடன் அவர்களும் பின்னர் வீடு திரும்பிவிட்டனர்.

கிழக்கு மாகாண ஆளுநராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லும் முகமாக கிழக்கு மக்கள் ஒன்றியம் அமைப்பினர் மேற்படி கடையடைப்பு, ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எந்தவித அறிவித்தலுமின்றி நிறுத்தப்படும் மின்சாரம்

## விவசாயிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சில பகுதியில் நேற்று முன்தினம் 9 ஆம் திகதி எவ்வித அறிவித்தலுமின்றி பிற்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மின்சாரம் தடைப்பட்டதால் விவசாயிகள் அசௌகரியங்களுக்குள்ளாக நேரிட்டதாகத் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட விவசாயிகள் தற்போது பெருமளவில் புகையிலைச் செய்கை உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுவரும் நிலையில் தாம் பயிர்களுக்கு உரங்களை இட்டு விட்டுக் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவித்தனர்.

இதனால் தாம் பொருளாதார நீதியில் பாதிக்கப்படவேண்டிய நிலை உருவாகுவதாகவும் இனி வரும் காலங்களிலாவது மின்சாரத்தை நிறுத்துவது தொடர்பாக முன்னறிவித்தல்களை சுரிவர வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)

# புகையிரத விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

(மாத்தறை)

மாத்தறையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த புகையிரதம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வசுடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது தில்ஷான் என்ற நபரே இவ்வாறு விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் சடலம் நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 120 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 65 | 60 |
| பச்சைமிளகாய் | 250 | 80 | 250 | 300 |
| தக்காளி | 120 | 100 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 35 | 60 |
| கோவா | 120 | 100 | 70 | 100 |
| கரட் | 100 | 100 | 110 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 100 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 75 | 80 |
| பாகற்காய் | 200 | 200 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 90 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 35 | 80 |
| பயற்றங்காய் | 200 | 140 | 150 | 160 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 | 160 |
| பீற்றூட் | 120 | 140 | 70 | 160 |
| கறிமிளகாய் | 250 | 200 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 700 | 800 | — | 500 |
| போஞ்சி | 100 | 130 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 200 | 140 | 130 | 180 |
| கீரை - 1பிடி | 50 | 60 | 30 | 50 |
| தேசிக்காய் | 150 | 150 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 130 | 150 | 150 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 240 |
| முள்ளங்கி | 40 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 60 | 110 | 80 |

# மகாபோதி சங்கத் தலைவரால் யாழில் பாடசாலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள பார்க்யூன் கோ சர்வதேச பாடசாலையில் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வை மகாபோதி சங்கம் மற்றும் யோசிதா அறக்கட்டளையின் தலைவர் பனாஹல உபதிஸ்ஸ தேரர் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் பாடசாலையை கடந்த வருடம் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் திறந்து வைத்தார். இந்தப் பாடசாலைக்குரிய கட்டுமானப் பணிகளை மகாபோதி அறக்கட்டளை நிறுவனம் முன்னெடுத்துள்ளது. இப்பாடசாலையில் புதிய மாணவர்களை இணைத்தல் மற்றும் ஆரம்பக் கல்வி நடவடிக்கை



நேற்று சம்பிரதாயபூர் வமாக மதத் தலைவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பிக்கப்பட்டது.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மகாபோதி சங்கம் மற்றும் யோசிதா அறக்கட்ட நிறுவனத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய பனாஹல உபதிஸ்ஸ தேரர் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் எங்களுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்கள் கிடைத்தால், மேலும் பாடசாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்போம். இந்தப் பாடசாலையை இங்கு ஆரம்பித்ததில் இந்தப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு நன்மை கிடைக்கும். சகவாழ்விற்கு பாரிய ஒரு சக்தியாக அமையுமென நான் நம்புகின்றேன்.

இந்தப் பாடசாலை யாழ்ப்பாணத்தில் 21 ஆவது பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலை 10 பேருடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 50 பேர் இருக்கின்றார்கள். இந்தப் பாடசாலைக்கு நிதி உதவி வழங்கிய யாழ்ப்பாண மாவட்ட தளபதி தர்சன ஹெட்டியாராட்சிக்கு இப்பிரதேச மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் நல்ல பிரயோசனத்தை அடைவார்கள் என நம்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி மகா போதி சங்கம் மற்றும் யோசித அறக்கட்டளை நிறுவனத்தினர் உட்பட பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-9-101)

# அதிகரிக்கும் அமைச்சர்களின் எண்ணிக்கை



(கொழும்பு)

புதிய அமைச்சரவை அந்தஸ்தல்லாத அமைச்சர்கள் இருவரும் பிரதியமைச்சர் ஒருவரும் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அவர்களது பெயர் விபரங்கள் பின்வருமாறு.

அமைச்சரவை அந்தஸ்தல்லாத அமைச்சர்கள்

1.ரவீந்திர சமரவீர -தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

2.வி.இராதாகிருஷ்ணன் -விசேட பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

பிரதியமைச்சர்

1.அப்துல்லாஹ் மஹ்ரூப்-துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதியமைச்சர்.

இதனிடையே அமைச்சர் தயா கமகேக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய அவருக்கு சமூக வலுவூட்டல் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# டெங்கு ஒழிப்பு தீவிரம்



(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் தெற்கு, கரணவாய் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்கள், நெல்லியடி பொலிஸார்,இராணுவத்தினர்,கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார உத்தியோகத்தர்கள் பங்கேற்று வீடுகள, வெற்றுக்காணிகள், பொது இடங்களைத் துப்புரவு செய்யுமாறு பொது மக்களைக் கேட்டுக் கொண்டனர். (இ-60)

# எம்.ஜி.ஆர்.பிறந்தநாள் விழா



(யாழ்ப்பாணம்)

எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழக ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய பற்றுணர்வாளர், மக்கள் திலகம் முன்னாள் தமிழக முதல்வர் முனைவர் எம்.ஜி.ஆரின் பிறந்தநாள் விழா எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நாட்களில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் எம்.ஜி.ஆர். உருவப் படத்திற்கு மரியாதை செலுத்தியும் மகத்தான சமூகப்பணிகளை மேற் கொள்ளுமாறும் இக் கழகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.(இ-5)

# நீர்நிலைகளை ஆக்கிரமித்த கழிவுகள்



(கரணவாய்)

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் தொடர்ச்சியாகக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதனால் அப்பகுதி நீர்நிலைகள்மாசுபட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை-மருதங்கேணி வீதியில் வல்லிபுரத்திற்கு அப்பால் பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குள் இவ்வாறு கழிவுகளை கொட்டி வருகின்றனர்.

இந்தக் கழிவுகள் உரிய முறையில் எரியூட்டப்படாது அப்படியே காணப்படுகின்றன.

இதனால் அப்பகுதி நீர்நிலைகள் மாசுபட்டுள்ளன. கால்நடைகள் கூட அந்நீரை அருந்தமுடியாத நிலை காணப்படுகிறது. (இ-60)

# 25 வருடங்களின் பின்னர் சொந்த மண்ணில் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி பகுதியில் கடந்த 25 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குளிருந்து விடுக்கப்பட்டுள்ள ஆதி மயிலிட்டி காசி புதராய் ஆலய பாலஸ்தானம் கடந்த வருட நடுப்பகுதியில் நடைபெற்று தொடர்ந்து நித்திய பூசைகள் இடம் பெற்று வருகின்றன.

இந் நிலையில் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆலயத்தில் பொங்கல் உற்சவம் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெறவுள்ளது.(இ-7)

## கடனட்டை மோசடி கென்யா பிரஜைகளுக்கு யாழில் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட மூன்று கென்யா நாட்டுப் பிரஜைகள் நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.(இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1613

### இளங்கோ

விட்டுக்கொடுக்கும் தன்மை நமக்கு இருந்தால் நாம் விட்டுக்கொடுத்த அனைத்தும் ஒருநாள் நம்மைத் தேடி வரும்



### அஸ்வின்

மண்ணில் வீடு கட்டி விளையாடும் கிராமத்துப் பிள்ளைகளிடம் இருக்கும் சந்தோசம் வீடியோ கேம் விளையாடும் நகரத்துப் பிள்ளைகளிடம் இருப்பதில்லை




### ராமு

பொருட்களைப் பயன்படுத்திவிட்டு தூக்கியெறிவது போல் மனிதர்களையும் தூக்கி எறியாதீர்கள் மனிதர்களுக்கு மனதுடன் கூடிய உயிர் இருக்கிறது



### சங்கரி

தூக்கியெறிபவர்களுக்கு நன்றி சொல்லுங்கள் அவர்களே உங்களை முளைக்க வைப்பார்கள்



### சுனில்

வாழ்க்கையில் பின்னோக்கி இழுக்கும்போது மனம் தளராதே... பின்னோக்கி இழுக்கப்படும் அம்புதான் வேகத்துடன் முன்னோக்கி பாய்கிறது



### கம்சா

வாழ்க்கையில் எதையும் அதிகம் விரும்பாதீர்கள். ஏனெனில் எதுவும் நமக்கான நிரந்தரமானவை அல்ல...!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

143



Peter Percival

ஆங்கிலக் கல்விக்கான தேவை பொதுவாகவும் அதிகரித்தும் காணப்பட்டதும் மிஷனரிமாரின் செயற்பாட்டுத் தேவைகளும் இடைநிலை, உயர்நிலைக் கல்வியை அளிப்பதற்குத் தூண்டுதலாக இருந் தன.இவற்றுக்கான அடித்த ளங்கள் வடக்கிலே டானியல் புவரினாலும் (Daniel Poor) வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த பீற்றர் பேசிவலினாலும் (Peter Percival) இடப்பட் டன.

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

இந்த முயற்சியே அவர்களைத் தமது தமிழ் அடையாளம் பற்றிய உணர்வு தோன்றுவதற்கான வழியிற் செல்லவும் அதன் வழி பின்னர் சுய நிர்ணய உரிமை நோக்கி முன்னேறவும் வழிவகுத்தது.

இக்கல்வி முயற்சிகள் பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில் எவ்வாறு ஆரம்பித்தன, அவை எவ்வாறு அவ்வளவு விரைவில் விருத்தியடைந்தன என்பவற்றை ஆராய்வதற்கு முன்னர் இந்த ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளும் முன்னெடுப்புக்களும் பெரும்பாலும் தமிழ்ப்பிரதேசங்களில் மட்டுமே நிகழ்ந்தன என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இதன் காரணமாக யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே கவனம் செலுத்தப்படும்.

அமெரிக்கன் சிலோன் மிஷனின் ஓர் ஆசிரியரான செல்லையாவின் கூற்றுப்படி: மிஷனரிமார் முதலில் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது ஒரு சில பாடசாலைகளே இருந்ததுடன் சிலரே ஓலைச் சுவடியில் வாசிக்க, எழுதக் கூடியவராக இருந்தனர்.

அத் துடன் மிகச் சிலரே அச்சிடப் பட்ட எழுத்துக்களை இலகு வாகவும் தங்கு தடையின்றியும் படிக்கக்கூடியவராக இருந்த னர். எனவே மிஷனரிமார், வாசிப்பவர் தொகையை அதிகரிப்பதற்காக வெவ்வேறு கிராமங்களில் இலவச சுதேச மொழிப் பாடசாலைகளை நிறுவினர்.

டச்சுக்காரர் ஆட்சியின் போது மதமாற்றத்தைச் சிறப்பாக மேற்கொள்ளத் தமிழ் மொழிக் கல்வி பிரதானமான மார்க்கமாகக் கருதப்பட்டதால் செல்லையா ஆசிரியரின் கூற்றினை முழுமையாக ஏற்பது கடினமாகவுள்ளது. இக்காலத்தில் எல்லாத் தேவாலயங்களுடனுமே பாடசாலைகள் இணைக்கப்பட்டிருந்தன.

டச்சுக்காரரான பல்தேயு (Baldaeus) இலங்கையை விட்டுச் செல்கையில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் 18 ஆயிரம் பாடசாலைப் பிள்ளைகள் இருந்தனர். இவர்களது பாடவிதானம் நிச்சயமாக மத ரீதியாக இருந்தபோதும் இவர்களுக்கு ஓரளவு எண்கணிதம், வாசிப்பு, எழுத்து என்பவற்றுடன் தமிழ்மொழியில் கற்பித்தலும் அளிக்கப்பட்டது.

இதற்கு மேலாக நாம் முன்னர் பார்த்தது போன்று யாழ்ப்பாணத் தமிழர் காலாதி காலமாக இடையறாததொரு சமூக ரீதியான தமிழ்மொழிக் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்தனர்.

மிஷனரிமாரின் மிகக் கடினமான பணியையிட்டுச் செல்லையா ஆசிரியர் அனுதாபப்பட்டதனால் போலும் மிஷனரிமாரின் கல்விப் பங்களிப்பை அவர் மிகைப்படுத்தியுள்ளார் என்பதை இவ் உண்மைகள் குறிப்புணர்த்துகின்றன.

அது அவ்வாறிருந்தபோதிலும் இந்த மிஷன்கள் குறிப்பாக அமெரிக்கன் சிலோன் மிஷன், திருச்சபை மிஷனரிச் சங்கம், வெஸ்லியன் மிஷன் ஆகியவை ஏனைய இடங்களைப் போலவே தமிழ்ப் பிரதேசங்களிலும் நவீன கல்வி முறையைப் புகுத்துவதில் முன்னோடிகளாக இருந்தனர் என்ற கருத்தில் வேறுபாட்டுக்கே இடமில்லை.

நாம் இந்த அத்தியாயத்தில் முன் குறிப்பிட்டது போன்று யாழ்ப்பாணத்தில் நல்லூரிலும் (1818), கோப்பாயிலும் (1849), திருச்சபை மிஷனரிச் சங்கத் திற்கு இரு நிலையங்கள் இருந் தன.

வெஸ்லியன் மிஷன் இதைவிடப் பரந்தளவில் யாழ்ப்பாணக் கரையோர நிலையங்களுடன் பருத்தித்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நிலையங்களை அமைத்திருந்தது.

இவ்விரு மிஷனரிக்குழுக்களும் வட இலங்கை தமிழ் மாகாணம், தென்னிலங்கை சிங்கள மாகாணம் என இலங்கைத் தீவை இரு மாகாணங்களாக 1819 இல் பிரித்துக் கொண்டனர்.

இது இலகுவான நிர்வாகத்திற்கும் செயற்பாடுகளை மேலும் சிறந்த முறையில் தொடர்வதற்கும் வசதியளித்தது.

அமெரிக்கன் மிஷனரிமார் தமது நடவடிக்கைகளை யாழ்ப்பாணத் தீபகற்பத்தினுள்ளேயே மட்டுப்படுத்திக் கொண்டனர். அவர்கள் 1816 இல் தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை எனுமிடங்களில் இரண்டு நிலையங்களை நிறுவினர்.

1820 இல் உடுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பிலும் பின்னர் சாவகச்சேரியிலும் உடுப்பிட்டியிலும் நிலையங்களை நிறுவினர். இந்த மிஷன்கள் யாவற்றுக்குமே குடியேற்ற அரசாங்கத்தின் முனைப்பான ஆதரவும் ஊக்கமும் கிடைத்தன.

1818 அளவில் வெஸ்லியன் மிஷன் யாழ்ப்பாணம், கிழக்கு மாகாணங்களிலிருந்த அவர்களது நான்கு வட்டாரங்களில் இருபத்தியொரு ஆம்பப் பாடசாலைகளை நிறுவியிருந்தன. இவ் ஆரம்பப் பாடசாலைகள் தமிழர் மத்தியில் எழுத்தறிவை மேம்படுத்த உதவின.

குறிப்பிடக்கூடிய அளவில் ஆரம்பக் கல்வி அளிக்கப்பட்டதும் இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி என்பவற்றுக்கான நிறுவனங்கள் அமைக்கப்படவேண்டியது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகிவிட்டது.

ஆங்கிலக் கல்விக்கான தேவை பொதுவாகவும் அதிகரித்தும் காணப்பட்டதும் மிஷனரிமாரின் செயற்பாட்டுத் தேவைகளும் இடைநிலை, உயர்நிலைக் கல்வியை அளிப்பதற்குத் தூண்டுதலாக' இருந்தன.

இவற்றுக்கான அடித்தளங்கள் வடக்கிலே டானியல் புவரினாலும் (Daniel Poor) வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த பீற்றர் பேசிவலினாலும் (Peter Percival) இடப்பட்டன. இவ்விரு அறிஞர்களினதும் கல்விச் செயற்பாடுகள் இக்காலகட்டத்துப் புரட்டஸ்தாந்துக் கல்வியின் முக்கியத்துவத்துக்குப் போதிய சான்றுகளாகும்.

(தொடரும்)

# சூடானில் அரசிற்கு எதிராக வலுக்கும் போராட்டம்
# பலி எண்ணிக்கை 22 ஆக உயர்வு

(கர்த்தூம்)

சூடானில் அரசுக்கு எதிரான போராட்டத்தின்போது ஏற்பட்ட வன்முறை மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகளால் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

சூடான்நாட்டில்ரொட்டி உற்பத்திக்கான அரசு மானியங்கள் நிறுத்தப்பட்டதால், ரொட்டி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இது பொது மக்களிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ரொட்டி விலையுயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து சமூக ஆர்வலர்கள், எதிர்க்கட்சியினருடன் இணைந்து பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டக்காரர்கள் பல் வேறு பகுதிகளில் வீதி மறியலில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், கடைகளை சூறையாடி அங்குள்ள பொருட்களை போராட்டக்காரர்கள் கொள்ளையடித்துச் செல்வதும் அதிகரித்தது. போராட்டக்காரர்களை ஒடுக்க கலவர தடுப்புப் பிரிவு பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் போராட்டக்காரர்களுக்கும்பொலிஸாருக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டு உயிர்ப்பலி ஏற்படுகிறது. கடந்த மாதம் நடந்த போராட்டங்களில் 19 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் கடந்த புதன் கிழமையன்று ஜனாதிபதி பஷீருக்கு ஆதரவாக தலைநகர் கர்த்தூமில் போட்டி பேரணி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அரசுக்கு எதிராகவும் தனியாக போராட்டம் நடைபெற்றது. இதனால் தலைநகரில் கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஓம்டர்மான் பகுதியில் திரண்ட நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள், அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பினர். 'ஜனாதிபதி ரஷீத் பதவி விலக வேண்டும், சுதந்திரம், அமைதி மற்றும் நீதி வேண்டும்' என கோஷமிட்டபடி பேரணியாக சென்றனர். அவர்களை பொலிஸார் சுற்றிவளைத்து தடுத்து நிறுத்தினர். பின்னர் கண்ணீர் புகை குண்டுகளை வீசி அவர்களை விரட்டியடித்தனர்.

இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். சிலர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஆனால் பொலிஸார் தாக்கியதால் 3 பேரும் உயிரிழந்தார்களா? என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

அரசுக்கு எதிரான போராட்டம் மற்றும் வன்முறைகளால் இதுவரை 22 பேர் உயிரிழந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் 40 பேர் வரை இறந்திருக்கலாம் என நியூயோர்க்கைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. (4-7)

# தேர்தல் தோல்விகளை அடுத்து தாய்வானின் புதிய பிரதமர் நியமனம்



(தாய்பே)

தாய்வானில் புதிய பிரதமராக, ஆளும் சுதந்திர சார்புடைய கட்சியின் முன்னாள் தலைவர் சூ செங் சாங் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுத் தேர்தல் தோல்விகளை அடுத்து மொத்த அமைச்சரவையும் பதவி விலகியதை அடுத்து இந்த நியமனம் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி சாய்யினால் பிரதமராக நியமிக்கப்பட்ட ஜனநாயக முற்போக்கு கட்சியில் இரண்டு தவணைகள் தலைவராக பதவி வகித்த சூ செங் சாங் கருத்து வெளியிடுகையில், சீனாவின் அச்சுறுத்தல்கள் மற்றும் வர்த்தக நெருக்கடிகளுக்கு மத்தியில் தாய்வான்பலசவால்களை எதிர்நோக்கி வருகின்றது.

அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையிலான வர்த்தக போர்தாய்வானையும்பெரிதும் பாதித்துள்ளது என தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற உள்ளக தேர்தலில் ஏற்பட்ட தோல்வி நிலை ஜனாதிபதி சாய் இங் வென்னுக்கு பாரிய சவால்களை ஏற்படுத்தியதுடன், அவர் மீது விமர்சனங்களையும் எழச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# அமெரிக்க-மெக்ஸிக்கோ எல்லையில் இருபது சடலங்கள் கண்டுபிடிப்பு!



(வோஷிங்டன்)

அமெரிக்க மற்றும் மெக்ஸிக்கோ எல்லைப் பகுதியில் 20 சடலங்களைக் கண்டுபிடித்துள்ளதாகவும் அவற்றில் 17 கருகிய நிலையில் காணப்பட்டதாகவும் மெக்ஸிக்கோ தெரிவித்துள்ளது.

குறித்த சடலங்களை நேற்று முன்தினம் புதன்கிழமை கண்டுபிடித்ததாகவும் அவற்றுக்கு அருகில் 5 வாகனங்களும் எரிந்த நிலையில் காணப்பட்டதாகவும் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நியூவோ லாவோடோ நகருக்கு அருகே (அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்திற்கும், மெக்ஸிக்கோவின் தாமொளிபஸ் மாநிலத்துக்கும் இடையிலான எல்லைப் பகுதியில்) அவை காணப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இது தொடர்பிலான மேலதிக விபரங்களை அவர் வெளியிடவில்லை.

மெக்ஸிக்கோவில் வன்முறைச் சம்பவங்கள் அதிகம் இடம்பெறும் மாநிலங்களில் தாமொளிபஸ் மாநிலமும் ஒன்றாகும். குறிப்பாக அங்கு கடந்த சில ஆண்டுகளில் அடையாளம் காணப்படாத நூற்றுக்கணக்கான சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## அரசுத் துறைகள் முடக்கம் நீடிப்பு
# டாவோஸ் பயணத்தை இரத்து செய்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அரசு துறைகள் முடக்கம் நீடிப்பதால்சுவிட்சர்லாந்தின்டாவோஸ் நகரில் உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதை ட்ரம்ப் தவிர்த்துள்ளார்.

அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாக ஊடுருவும்வெளிநாட்டினரைதடுக்கமெக்ஸிக்கோ எல்லையில் சுவர் கட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளார். அதற்காக ரூ.39,693 கோடி (5.7 பில்லியன்டொலர்) நிதி ஒதுக்கும்படி அமெரிக்க பாராளுமன்றத்திடம் ஒப்புதல் கேட்டார்.

அதற்கு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் எம்.பி.க்கள் எதிர்ப்பு தெரிவித்து ஒப்புதல் வழங்கவில்லை. அதனால் ஆண்டு பட்ஜெட் பாராளுமன்றத்தில் நிறைவேறவில்லை. இதனால் கடந்த 20 நாட்களாக பாதி அரசு அலுவலகங்கள் செயற்படாமல் முடங்கியுள்ளன.

அண்மையில் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியை சேர்ந்த பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர்கள் ஆலோசனை கூட்டத்துக்கு ட்ரம்ப் ஏற்பாடு செய்தார். வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சுமுக முடிவு எட்டப்படவில்லை. தனது நிபந்தனைகள் ஏற்கப்படாததால் இடையில் வெளியேறினார் ட்ரம்ப்.

அரசுத் துறைகள் முடக்கம் நீடிக்கும் நிலையில், டாவோஸ் சுற்றுப்பயணத்தை ட்ரம்ப் ரத்து செய்துள்ளார். உலகப் பொருளாதார மன்ற மாநாட்டிற்காக டாவோஸ் செல்லும் மிகவும் முக்கியமான பயணத்தை ரத்து செய்திருப்பதாக ட்ரம்ப் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

உலகபொருளாதார மாநாடு சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# உடன்பாடற்ற பிரெக்ஸிற்றை தவிர்க்க ஜப்பான் வலியுறுத்து



(டோக்கியோ)

ஒப்பந்தமில்லாமல் ஐரோப்பிய ஒன்றியத்தைவிட்டு வெளியேறுவதை தவிர்க்குமாறு ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே பிரித்தானிய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் பிரதமர் தெரேசா மேயின் பிரெக்ஸிற் உடன்பாட்டை வரவேற்ற ஜப்பான் பிரதமர், நாடாளுமன்ற வாக்கெடுப்பின்போது ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டால் ஜப்பான்-பிரித்தானியா இடையேயான விநியோகத் தொடர்பு பாதிக்கப்படுமென அச்சம் வெளியிட்டுள்ளார்.

ஒப்பந்தமற்ற பிரெக்சிற்றை பிரித்தானியா தவிர்ப்பதையே தாம் காண விரும்புவதாகவும் சர்வதேச பொருளாதாரம் மீதான பிரெக்சிற்றின் செல்வாக்கு குறைக்கப்படுவதை காண விரும்புவதாகவும் ஜப்பான் பிரதமர் நேற்று முன்தினம் நெதர்லாந்தில் தெரிவித்தார்.

பிரெக்சிற் ஒப்பந்தம் மீதான நாடாளுமன்ற வாக்கெடுப்பு வரையில் தெரேசா மேயுடன் நெருக்கமாக பணியாற்றி அவருக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் ஷின்சோ அபே தெரிவித்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்த பிரித்தானிய வர்த்தக அமைச்சர் கிரேக் கிளார்க், உடன்பாடற்ற பிரெக்சிற் ஒரு பேரழிவாக அமையுமெனவும் ஜப்பான் போன்ற வர்த்தக கூட்டாளிகளுக்கு ஒப்பந்தமற்ற பிரெக்சிற் தவிர்க்கப்படுமென்ற உத்தரவாதம் வழங்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிரித்தானியாவுக்கு விஜயம் செய்யும் ஜப்பான் பிரதமர் பிரெக்சிற்றின் பின்னர் இரு நாடுகளுக்குமிடையேயான பொருளாதார வாய்ப்புகள் குறித்து பிரதமர் தெரேசா மேயுடன் பேச்சுவார்த்தை நடத்துவாரென தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# கார்-லொறி-வான் விபத்து 9 பேர் உடல் நசுங்கிப்பலி



(சாண்டியாகோ)

சிலியில் சங்கிலி தொடர் போல நிகழ்ந்த வீதி விபத்தில் 10 மாத குழந்தை உட்பட 9 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் வால்டிவியா மாகாணத்தின் தலைநகர் வால்டிவியா மற்றும் மாபில் நகரங்களை இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையில் ஒரு கார் சென்று கொண்டிருந்தது.

இந்த காரில் 10 மாத பச்சிளம் குழந்தை உட்பட 3 பேர் இருந்தனர். அப்போது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு ஓடிய கார் ஒரு லொறி மீது மோதியது. இதனால் நிலை தடுமாறி எதிர்த்திசைக்கு சென்ற லொறி அந்த வழியாக வந்த வன் மீது மோதியது.

சங்கிலி தொடர் போல நிகழ்ந்த இந்த கோர விபத்தில் 10 மாத குழந்தை உட்பட 9 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 11 பேர் படுகாயம் அடைந்தனர். (4-7)

# ஏமனில் தாக்குதல்கள் ஆரம்பம் மீண்டும் போர் மூளும் அபாயம்



(சனா)

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் ஏமன் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் ஆளில்லா விமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்-அனாட் இராணுவ தளத்தில் நடைபெற்ற இராணுவ அணிவகுப்பு ஒன்றின் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலில் குறைந்தது ஆறு வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏமனில் மூன்று வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்தபோரைமுடிவுக்குகொண்டு வரும் பொருட்டு கடந்த டிசம்பர் மாதம் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் ஏமன் அரசுக்கு மிடையே ஐக்கிய நாடுகள் சபையினால் சமாதான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.

பேச்சுவார்த்தைகளின் போது தாக்குதல்களை நிறுத்துவதற்கு இருதரப்பினரும் சம்மதம் தெரிவித்ததையடுத்து கடந்த சில வாரங்களாக ஏமனில் நடைபெற்றுவந்த போர் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் ஏமன் இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்டுள்ள ட்ரோன் தாக்குதலால் மீண்டும் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (4-7)

# ஊழல் செய்ததால் சசிகலாவுக்கு சிறைத்தண்டனை

## மு.க.ஸ்ராலின் சுட்டிக்காட்டு

(திருச்சி)

ஊழல் செய்ததாலேயே, அ.தி.மு.கவின் முன்னாள் பொதுச் செயலாளர் சசிகலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்ராலின் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருச்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,



"அ.தி.மு.க அரசாங்கத்துக்கு மீண்டும் ஆட்சிக்கு வருவோமென்ற நம்பிக்கை இல்லை.

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் அதிகளவான ஊழல்கள் இடம்பெற்ற போது, அவைகள் மறைக்கப்பட்டு அ.தி.மு.க. ஆட்சி செய்து வந்தது.

ஆனாலும் குறித்த தவறுகள், குற்றங்கள் நிரூபிக்கப்பட்டமையினாலேயே சசிகலா தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றார்" என மு.க.ஸ்ராலின் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (4-7)

# அணுவாயுதக் களைவு தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுக்களில் முடக்கம்

## வடகொரிய ஜனாதிபதி கிம் கவலை

(பியாங்யாங்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், அணுவாயுதக் களைவு தொடர்பில் அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுகளில் முடக்கம் ஏற்பட்டிருப்பது குறித்து கவலை வெளியிட்டுள்ளார்.

சீன ஜனாதிபதி சீ ஜின் பிங்கைச் சந்தித்துப் பேசிய போது கிம் அவ்வாறு தெரிவித்ததாக வடகொரிய அரசாங்க ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க மற்றும் வடகொரிய உறவுகளை மேம்படுத்துவதிலும், அணுவாயுதக் களைவு பற்றிய பேச்சில் முன்னேற்றம் காண்பதிலும் முரண்பாடு ஏற்பட்டிருப்பது தமக்குக் கவலையளிப்பதாக கிம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு பேச்சுவார்த்தையின் மூலம் அமைதித் தீர்வு காணவேண்டும் என்ற வடகொரியாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்றும் அவர் தெரிவித்ததாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (4-7)

# தமிழகத்தின் மீது அக்கறையுள்ளவர்களுக்கே ஆதரவு

## முதல்வர் பழனிச்சாமி தெரிவிப்பு

(சென்னை)

தமிழகத்துக்கு நன்மை செய்பவர்களுடன் அ.தி.மு.க கூட்டணி அமைக்குமென முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

மாற்று கட்சிகளை சேர்ந்த சுமார் ஆயிரம் பேர் அ.தி.மு.கவில்இணைந்துக்கொண்ட நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சென்னை ராயப்பேட்டையில் நடைபெற்றது.

இதன்போது, அந் நிகழ்வில் கலந்துகொண்ட முதலமைச்சர் பழனிச்சாமி இதனை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "தமிழ் நாட்டு மக்கள் மீது அக்கறை செலுத்தும் ஒருவரே மத்தியில் ஆட்சியமைக்க வேண்டுமென்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

இதேவேளை உள்ளூராட்சி அமைச்சராக தி.மு.க தலைவர் மு.க.ஸ்ராலின் இருந்த காலத்தில், செய்யாத விடயங்களை தற்போது தேர்தலுக்காக அவர் செய்து வருகின்றார்.



மேலும் கிராமம் பற்றி அறியாத ஸ்ராலின், தற்போது கிராமம் கிராமமாக சென்று மக்களை தவறாக வழி நடத்தி வருகின்றார்" எனவும் பழனிச்சாமி குற்றம் சுமத்தியுள்ளார். (4-7)

# எல்லைப் பகுதிகள் பாதுகாப்பாக உள்ளன

## பிபின் ராவத் தெரிவிப்பு

(டில்லி)

நாட்டின் எல்லைப் பகுதிகள் மிகவும் பாதுகாப்பாக உள்ளதென இராணுவத் தளபதி பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,


"நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு எல்லைப் பகுதிகளை பாதுகாப்பான முறையில் பராமரித்து வருகின்றோம். இதனால் நாட்டின் எல்லைகள் குறித்து எவரும் அச்சமடையத் தேவையில்லை.



இதேவேளை இராணுவம் ஒரு குடும்பம் போன்றது. ஆகையால் ஓரினச்சேர்க்கை மற்றும் தகாத உறவை ஒரு போதும் அனுமதிக்க முடியாது" என பிபின் ராவத் தெரிவித்துள்ளார். (4-7)

# அமெரிக்காவை பாதுகாக்க எல்லைச் சுவர் மிக முக்கியம்

## ட்ரம்ப் வலியுறுத்து



(வோஷிங்டன்)

அமெரிக்காவை பாதுகாப்பதற்கு மெக்சிக்கோ எல்லை சுவர் அமைக்கப்படுவது மிக முக்கியமானது என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

டெக்ஸாஸ் மாநிலத்தின் ரியோ கிரேண்ட் பகுதிக்கு விஜயம் செய்திருந்த அவர் அமெரிக்க எல்லை தொடர்பாக ஆராய்ந்த பின்னர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க-மெக்சிக்கோ எல்லைச் சுவர் பிரச்சினையில் வாக்குவாதம் ஏற்படவே எதிர்க்கட்சி கூட்டத்தில் இருந்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று வெளியேறியிருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்காவை பாதுகாப்பதற்கு எல்லை சுவர் அமைப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் மெக்சிக்கோவில் இருந்து வரும் அகதிகள் தொடர்பில் மாத்திரம் பேசவில்லை. மாறாக உலகம் முழுவதிலும் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் பேசுகின்றேன்.

மெக்சிக்கோ எல்லை ஒரு பலவீனமான இடமாக இருப்பதால், அவர்கள் இலகுவாக நுழைகின்றனர். எனவே சட்டங்கள் வலுவாக இருக்க வேண்டும், உரிய பாதுகாப்பு தேவை. எனவே இதனை கட்டுப்படுத்த ஒரு தடை அவசியம் தேவை" என்று தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நேற்று முன்தினம் சந்திப்பில் பங்கேற்ற எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற மேல்சபை தலைவர் நேன்சி பெலோசி ட்ரம்ப் ஆவேசமாக பேசியதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் எதிர்பார்த்தது நடக்கவில்லை என்பதால் மிகுந்த ஆத்திரத்துடன் வெளியேறியதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

# சபரிமலை வன்முறை

## கேரள ஆளுநரை சந்தித்து பினராயி விஜயன் விளக்கம்



(கேரளா)

சபரிமலை முழு அடைப்பு போராட்டத்தின் போது, நடைபெற்ற வன்முன்ற சம்பவங்கள் தொடர்பாக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், கேரள ஆளுநர் சதாசிவத்தை சந்தித்து விளக்கமளித்துள்ளார்.

கேரளாவில் நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சு, கேரள ஆளுநர் சதாசிவத்திடம் அறிக்கையொன்றை கோரியுள்ளது.

இந்நிலையிலேயே முதலமைச்சர் பினராயி விஜயன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ஆளுநர் சதாசிவத்தை சந்தித்து சபரிமலை தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, கேரளாவில் முழு அடைப்பு போராட்டத்தின் போது நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் மற்றும் மாநில அரசு எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக பினராயி விஜயன் விளக்கமளித்துள்ளார்.

மேலும், சபரிமலை வன்முறை சம்பவம்தொடர்பில் அறிக்கையொன்றையும் ஆளுநரிடம் சமர்ப்பித்துள்ளார்.


சபரிமலை கோயிலுக்கு அனைத்து வயது பெண்களும் செல்லலாமென உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து, ஐயப்ப பக்தர்கள் இந்தியா முழுவதிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருப்பினும் அண்மையில் பிந்து, கனகதுர்கா ஆகிய இரு இளம்பெண்கள் பொலிஸாரின் பாதுகாப்புடன் சுவாமி தரிசனத்தில் ஈடுபட்டனர்.

இதனால்கேரளாவில்நடைபெற்ற முழு அடைப்பு போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதன்போது அரச பேருந்துகள், கடைகள், கட்சி அலுவலகங்கள் ஆகியன போராட்டக்காரர்களால் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)




# இரகசியத்தை சொல்லுங்கள்



ஒரு பண்ணையில் ஆண் கழுதையொன்றும் பெண் கழுதையொன்றும் வளர்ந்து வந்தன. ஆண் கழுதை பகலில் கடுமையாக உழைக்கும். பண்ணைக்குள் கொண்டு செல்ல வேண்டிய சரக்குகளை முதுகில் சுமந்து செல்லும். மாலை தங்குமிடம் வந்ததும் அங்கு கிடக்கும் காய்ந்த புல்லை மேய்ந்து பசியாறும்.

பெண் கழுதை எந்த வேலையும் பார்ப்பதில்லை. பசுமையாகக் கிடைக்கும் புல்லைத் தின்று விட்டு, தொழுவத்தில் தூங்கி எழும். மிகவும் மகிழ்ச்சியாக, வேலை பார்க்காமல் பொழுதைக் கழித்தது.

ஒருநாள் உழைத்த களைப்புடன் சோர்வாக ஆண் கழுதை வந்து சேர்ந்தது. களைப்பின் மிகுதியால் வந்தவுடனே படுத்தும் விட்டது. ஆண் கழுதையைப் பார்த்து பெண் கழுதை பரிதாபப்பட்டது.

“உன்னைப் பார்க்கவே பாவமாக இருக்கிறது!” எனக் கிண்டல் செய்தது.

“என்ன செய்வது என் நிலை அப்படி, உழைத்தால் தான் முதலாளி விடுவார்!” என்றது ஆண் கழுதை.

இதைக்கேட்டதும் பெண் கழுதை சிரித்தது.

“ஏன் சிரிக்கிறாய்?”

“சிரிக்காமல் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? நான் மட்டும் கஷ்டப்பட்டு வேலையா செய்கிறேன்!”

ஆண் கழுதை அதை ஆச்சரியத்துடன் பார்த்தது.

“ஆமாம்! நானும் இதைப் பற்றி உன்னிடம் கேட்க வேண்டும் என்று தான் நினைத்திருந்தேன். அதை முதலில் கூறு!”

“பண்ணையாள் வந்து உன் கயிற்றினை அவிழ்த்து விட்டதும், உடனே நீ வேலை செய்யப் போய் விடுவாய். நான் அப்படிப் போய் விட மாட்டேன்!”

“பிறகு என்ன செய்வாய்?”

“அப்படியே படுத்திருப்பேன். நான் எழவில்லை என்றதும் சாட்டையால் நான்கு அடி அடிப்பான். பொறுத்துக் கொண்டு படுத்துக் கொள்வேன். பிறகு என்னை விட்டு விட்டுச் சென்று விடுவான்!” என்றது பெண் கழுதை.

“இவ்வளவுதானா!” ஆச்சரியமாகக் கேட்டது ஆண் கழுதை.

“ஆமாம்! நீயும் அது போல சண்டித்தனம் செய்து விடு. உன்னையும் பண்ணையாள் விட்டுவிட்டுப் போய் விடுவான். எல்லாம் நம் கையில்தான் உள்ளது!” என அறிவுரை வழங்கியது.

காலைப் பொழுது வேலைக்குச் செல்லும் நேரம் பண்ணையாள் வந்தான். வழக்கம் போல் ஆண் கழுதையைப் பிடித்துக் கொண்டு செல்ல முயன்றான். இன்று ஆண் கழுதை படுத்துக் கொண்டு சண்டித்தனம் செய்தது.

பண்ணையாள் சாட்டை எடுத்து அடித்தும் பார்த்தான். ஆண் கழுதை எழுவதாய்த் தெரியவில்லை. பண்ணையாள் பலவிதங்களிலும் முயற்சி செய்து பார்த்து விட்டு முதலாளியிடம் சென்றான்.

“ஐயா! இந்த ஆண் கழுதை என்றுமில்லாமல் சண்டித்தனம் செய்கிறது!” என்றான்.

“சரி பரவாயில்லை. இன்னைக்கு ஆண் கழுதைக்கு ஓய்வு கொடுத்துவிடு. தினமும் நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்து சும்மா இருக்கும், அந்தப் பெண் கழுதையை அடித்து இழுத்துப் போ!” என்றார்.

பண்ணையாளும் வந்து ஆண் கழுதை சாப்பிட பசும் புல்லைக் கொண்டு வந்து போட்டான்.

பிறகு, பெண் கழுதையை இழுத்துச் சென்று வேலையில் ஈடுபடுத்தினான்.

கெட்டதைச் சொல்லிக் கொடுக்கப் போய் தன்னுடைய பிழைப்பே போய் விட்டதை எண்ணி மிகவும் வருந்தியது பெண் கழுதை.

## மின்னல் தாக்காமல் காத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?



• வானிலையைக் கவனியுங்கள். இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பு இருந்தால் வெளியில் செல்லும் பயணத்தை ஒத்திவையுங்கள், அல்லது வகைப்படுத்துங்கள். வீடுகளில் பாதுகாப்பாய் இருங்கள்.

• பெரும்பாலான மின்னல் பாதிப்புகள் மழை விட்ட பின்போ, மழை துவங்குவதற்கு முன்போ தான்நிகழ்கின்றன எனவே, மழை விட்டபின் ஒரு அரை மணி நேரமாவது எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அதுபோலவே மழை வரும் வாய்ப்பு தெரியும் போதே கவனமாய் இருக்க வேண்டும்.

• மின்னலை நாம் பார்ப்பதற்கும் தொடரும் இடிச் சத்தத்தைக் கேட்பதற்கும் இடையேயான நேரமே நமக்கும் மின்னல் தாக்கிய இடத்தும் இடையேயான தூரத்தைச் சொல்கிறது. இந்த இடைவெளி ஐந்து விநாடிகளை விடக் குறைவெனில் சுமார் ஒரு மைல் இடைவெளியில் எங்கோ மின்னல் தாக்கியிருக்க வாய்ப்பு உண்டு என கணித்துக் கொள்ளுங்கள்.

• இடி மின்னல் வேளைகளில், உயரமான மரங்கள், கொடிக் கம்பங்கள், கைபேசிக் கோபுரங்கள், பேருந்து நிறுத்தங்கள், உலோகப் பொருட்கள் இருக்கும் இடங்கள் இவற்றின் அருகே நிற்காதீர்கள்.

• அதே போலவே வெட்ட வெளியிலோ, நீர் நிலைகளிலோ, கடற்கரைகளிலோ, விளையாட்டு மைதானங்களிலோ நிற்காதீர்கள். அந்த இடங்களில் உயரமாய் இருப்பது நீங்கள் தான் என்பதால் நேர் மின்சாரத்தை மேகம் உங்கள் உடலிலிருந்து ஈர்க்கக் கூடும்.

• ஒருவேளை வெட்ட வெளியில் இருக்க நேர்ந்தால் தரையில் படுக்கவே படுக்காதீர்கள். குனிந்து வயல் வரப்பில் குந்தவைத்து அமர்வது போல அமருங்கள். தலையைக் குனிந்து கால் முட்டியில் வையுங்கள். தரைக்கும் உடலுக்குமான தொடர்பு எவ்வளவு குறைவாய் இருக்கிறதோ அவ்வளவு நல்லது.

• சட்டென மயிர்க்கூச்செறிந்தாலோ, அதிர்வு உணரப்பட்டாலோ மின்னல் வெகு அருகில் தாக்கும் வாய்ப்பு உண்டு என உணர்ந்து கொள்ளுங்கள். குழுவாக இருக்காதீர்கள். பிரிந்து தனித் தனியே செல்லுங்கள்.

• வீட்டுக்குள்ளே இருந்தால், அந்த நேரத்தில் தொலைபேசியைப் பயன்படுத்தாதீர்கள். தொலைபேசியில் அருகே இருப்பதைத் தவிருங்கள். தொலைக்காட்சி, கணனி உட்பட அனைத்து எலக்ட்ரோனிக் கருவிகளையும் சற்று ஓய்வில் இருக்க விடுங்கள். மின் இணைப்பிலிருந்து அவற்றை துண்டித்து விடுங்கள். கேபிள் டிவியின் கேபிளையும் கழற்றிவிடுங்கள்.

• காரில் சென்று கொண்டிருந்தால் காரின் கண்ணாடிகளை முழுவதுமாக மூடிவிட்டு ஓரமாக நிறுத்திவிட்டு அமைதியாய் இருங்கள். மரங்கள், கம்பங்கள் போன்றவற்றின் அருகே வண்டியை நிறுத்தாமல் கவனமாய் இருங்கள்.

• வீடுகளில் அந்த நேரங்களில் சமையல் செய்வது, குளிப்பது போன்ற வேலைகளைச் செய்யாதீர்கள். குறிப்பாக திறந்த ஜன்னல் அருகே நின்று வானத்தை வெறிக்காதீர்கள்.

## இரவு நேரங்களில் மரங்களின் கீழ் ஏன் தூங்கக் கூடாது?

பகல் நேரங்களில் மரத்தினடியில் படுத்துறங்குவதால் தவறில்லை. ஆனால், இரவு நேரங்களில் மரத்தடியில் படுப்பது பெரிதும் தீங்கானது.

பகல் நேரத்தில் தாவரங்கள் காற்றிலுள்ள கரியமில வாயுவை உட்கொண்டு பிராண வாயுவை வெளியிடுகின்றன. அதனால் மரத்தடியில் படுப்பவருக்கு பாதிப்பு ஏற்படாது.

ஆனால், இரவில் மரங்களும் காற்றிலுள்ள பிராண வாயுவை உட்கொண்டு, கரியமில வாயுவை வெளியிடுகின்றன. அதனால் மரத்தடியில் படுப்பவருக்கு, சுவாசிக்கத் தேவையான அளவுக்கு வேண்டிய பிராண வாயு கிடைக்காது. கரியமில வாயுவையே சுவாசிக்க நேரும். அதனால், இரவில் மரத்தடியில் படுப்பவரின் உடல்நலம் பாதிக்கப்படும்.

> இறைவனுக்கும் உங்கள் நாட்டுக்கும் உங்கள் நண்பனுக்கும் உண்மையாக இருங்கள்.
>
> ~ வான்டைக்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாட்டில் தேர்தல் பேரிகை கிட்டவாகக் கேட்கிறது

பாராளுமன்றக் கலைப்பு செல்லுபடியற்ற தென்பதோடு ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகப் பதவியேற்று ஆட்சி நடப்பதாக இருந்தாலும் அதிகாரம் உள்ள ஜனாதிபதியுடன் பகைத்துக் கொண்டபின், அரசாட்சியை சுமுகமாக நடத்துவதென்பது முடியாத காரியமே.

இந்நிலையில் விரைவில் ஒரு பொதுத் தேர்தலை நாடு சந்திக்க வேண்டியது கட்டாயமாகிவிட்டது.

பொதுத் தேர்தலை நடத்துங்கள்; நாங்கள் வென்று காட்டுகிறோம் என்பது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பின் கோரிக்கை.

தென்பகுதியில் மக்கள் ஆதரவு தமக்கு உண்டு என்பது அவர்களின் அறிவிப்பு.

இந்நிலையில் பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயங்குமாக இருந்தால் அது கட்சியின் சுயகௌரவத்துக்கு இழுக்காக அமையும்.

எனவே பொதுத் தேர்தலுக்கு நாங்களும், தயார் என்ற அறிவிப்பை ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணி தெரிவித்தே ஆக வேண்டும்.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இதுகாறும் ஆதரவாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் எனக் கூறமுடியாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரே எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார் என்பது கூட்டமைப்பினரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆனால் அந்த நம்பிக்கை அறுந்துவிட்டது. சபாநாயகர் கரு ஜயசூரிய தனது நடுநிலைத் தன்மையை நிரூபிக்க வேண்டிய சூழ்நிலையில், மகிந்த ராஜபக்ஷவை எதிர்க் கட்சித் தலைவராக அறிவித்துள்ளார்.

இஃது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகுந்த அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இரா.சம்பந்தருக்கு வழங்கியபோது அது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

இதற்கான முக்கிய காரணம் இரா.சம்பந்தரை எதிர்க்கட்சித் தலைவராக இருத்துவதன் மூலம் போர்க்குற்ற விசாரணை தொடர்பான அவர்களின் கோரிக்கைகளை மெலினப்படுத்த முடியும் என்பதாகும்.

மகிந்த ராஜபக்ஷ தரப்பின் எண்ணப்பாடு கனகச்சிதமாக நிறைவேறியது என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

ஆனால் இப்போது பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவது தவிர்க்க முடியாது என்ற கட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமதாக்குவது என்ற முடிவில் மகிந்த தரப்பு உறுதியாக இருக்கிறது.

அதேநேரம் பாராளுமன்றக் கலைப்புக்கு நீதிமன்றப் படி ஏறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தர் ஐயாவின் எதிர்க்கட்சிப் பதவி நீக்கப்பட்டமை தவறு எனக் கூறி நீதிமன்றம் ஏறப்போவதில்லை என்பதும் தெளிவு.

நிலைமை இதுவாக இருக்க, கூட்டமைப்பின் ஆதரவோடு தாம் தொடர்ந்தும் ஆட்சி நடத்துவதானது சிங்கள மக்களின் எதிர்ப்புக்கு வழிவகுக்கும் என்பதால்,

பொதுத் தேர்தல் என்ற இடத்துக்கு செல்வது கட்டாயமானதாகிறது.

இதனை உறுதிப்படுத்துவதாக தமிழர் தாயகத்திலும் வாக்குச் சுவிகார ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

## மாணவர்கள் போதை மாத்திரை உட்கொண்ட விவகாரம் மருந்தகங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் சோதனை!

## உறுதிப்படுத்தினால் உச்ச நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மீள்குடியேற்றப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் - 09ல் கல்வி கற்கும் 14 வயதுடைய மூன்று மாணவர்கள் குறிப்பிட்ட ஒரு மருந்தை போதைப்பொருளாகப் பாவித்தமை காரணமாக போதை தலைக்கு ஏறியநிலையில் பாடசாலை சமூகத்தால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 10.01.2019ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த மூன்று மாணவர்களும் விசாரணை செய்யப்பட்டபோது அவர்களின் தகவல்களின் அடிப்படையில் அவர்களால், அப்பிராந்தியத்தில் உள்ள குறிப்பிட்ட மருந்தகங்களில் இருந்தே அம்மருந்து இவர்களுக்கு கிடைக்கப்பெற்றதாக அறியக் கூடியதாக உள்ளது.

அந்த அடிப்படையில் சுகாதார பகுதியினரால் அம் மருந்தகங்கள் பரிசோதனை செய்யப்பட்டபோது சில மாணவர்களுக்கு மேற்படி மருந்துகள் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கப் பெற்றன. இம்மருந்துகளானது மாணவர்களுக்கு எவ்வித வைத்திய பரிந்துரைகளும (Prescription) இன்றி வழங்கப்பட்டுள்ளமையை அறியக் கூடியதாகவுள்ளது.

இது தொடர்பாக சுகாதாரப் பகுதியினரும் விரைந்து சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர். மேலும் சுகாதாரப் பகுதியினர் பாடசாலை சமூகத்துடன் தொடர்பு கொண்டு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்பட பாடசாலை சமூகத்தினருக்கான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பிரதேச செயலருடன் இணைந்து கிராம மட்டங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

மாவட்ட சுகாதார பகுதியினர் இவ்வாறான நடவடிக்கைகள் வேறுபகுதிகளிலும், மருந்தகங்களிலும், வேறு மட்டங்களிலும் நடைபெறுகின்றனவா எனப் பரிசோதிப்பதற்கான நடவடிக்கையை உரிய தரப்பினருடன் இணைந்து மேற்கொள்ள உள்ளனர். அவ்வாறு அறியப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு எதிராக உச்ச நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இத்துடன் பெற்றோர்கள், தமது பிள்ளைகள் அவர்களின் நடவடிக்கைகள் மற்றும் சுற்றாடல் நிகழ்வுகள் குறித்து மிகவும் கவனமாகவும் அவதானிப்புடனும் இருப்பது மிகவும் முக்கியம் என்பதனையும் சுகாதார பகுதியினர் வலியுறுத்தியுள்ளனர். (இ)

## ஆட்கடத்தல் கும்பலிடமிருந்து 24 இலங்கையர்கள் மீட்பு

### மலேசிய பொலிஸார் நடவடிக்கை

(கோலாலம்பூர்)

மலேசியாவிலிருந்து அவுஸ்திரேலியா, நியூசிலாந்திற்கு ஆட்களை கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இலங்கையர்களை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ள மலேசியப் பொலிஸார் இவர்களிடமிருந்து 24 இலங்கையர்கள் உட்பட 34 பேரை ,மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்

மலேசிய பொலிஸ்மா அதிபருடன் சிறி முகமட் பியுஜி ஹருன் இதனை தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்டுள்ளவர்களில் எட்டுப் பெண்கள் உட்பட 24 இலங்கையர்களும் 10 இந்திய பிரஜைகளும் உள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக மலேசியாவிற்குள் நுழைந்து தங்கியிருந்த குற்றச்சாட்டில் மூன்று இலங்கையர்களை கைதுசெய்துள்ளோம். இவர்களே ஆட்கடத்தலில் ஈடுபட்டனர் என சந்தேகிக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட நபர்கள் படகொன்றை கொள்வனவு செய்துள்ளமையும் மூன்று படகு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது எனவும் மலேசிய பொலிஸ்மா அதிபர தெரிவித்துள்ளார்.

இவர்கள் நியூசிலாந்து அவுஸ்திரேலியாவிற்கு ஆட்களை கடத்தும் நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர் 2018 நடுப்பகுதி முதல் மலேசியாவை தளமாக கொண்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முறியடித்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஐ.நா.தீர்மானங்களை நிறைவேற்றுவதில் இலங்கை தோல்வி - உலகத் தமிழர் பேரவை

(கொழும்பு)

இலங்கையின் புதிய இராணுவ பிரதானியின் நியமனம், ஐ.நா. தீர்மானங்களை நிறைவேற்றுவதில் இலங்கை தோல்வியடைந்துள்ளது என்பதை உறுதிபடுத்தும் வகையில் அமைந்துள்ளது என உலகத் தமிழர் பேரவை சுட்டிக் காட்டியுள்ளது.

இராணுவ பிரதானியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து உலகத் தமிழர் பேரவை நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இலங்கை இராணுவத்தின் பிரதானியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை தமிழ் சமூகத்தினர் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், இத்தகைய நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஜெனிவாவில் கூடுதல் கவனம் செலுத்தி பரிசீலிக்கப்பட வேண்டும்.

அதுமாத்திரமின்றி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை உண்மையாக நிறைவேற்றுவதில் இலங்கை தோல்வி கண்டுள்ளது என்பதனை இந்நியமனம் சர்வதேச சமூகத்திறகு தெளிவுபடுத்தியுள்ளது" என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5 மணி வரை **யாழ் பிரதேசத்தில** பொம்மைவெளி, நாவாந்துறை, காக்கைதீவு, சங்கானை வீதி (அச்சுவேலி),வசாவிளான் ஒரு பகுதி, பலாலி ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** லக்ஸபானா வீதி, தோணிக்கல், நேரியகுளம், இலுப்பைக்குளம், துட்டுவாகை, அழகபுரி, சின்னகுளம், தந்திரி மலை வீதி, சின்னசிப்பிகுளம் ,முதலியார் குளம் , கப்பாச்சி, முகத்தான்குளம் **1st Farm,** ஆண்டிய புளியங்குளம், புதுக்குளம், கஜசிங்கபுர இராணுவ முகாம், **New Steel Pvt (Ltd)** ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** உயிலங்குளத்திலிருந்து தலைமன்னார் பிரதேசமமுழுவதும் பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை **ST. Lourdes** ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், இளைஞர் பயிற்சி நிலையம், **Timex** ஆடைத் தொழிற்சாலை, வங்காலை கடறபடை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம்,**CTB** மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத தொடர்பு நிலையம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டிபம் கவுஸ், மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் இராணுவ முகாம், தள்ளாடி டயலொக் கோபுரம், தள்ளாடி இராணுவ முகாம், பேசாலை **Palmyra House,** மன்னார் அரசாங்க அதிபர் அலுவலகம், செம்மண்தீவு, செம்மண் தீவு **Ware House, Don Bosco,** அச்சங்குளம், எருவிட்டான், அறுகுகுன்று, அளவக்கை, மாவிலங்கேணி, வாழ்க்கை பட்டான் கண்டல், பல்லங்கோட்டை, பண்டாரி குளம்,நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உடல், மனம், அறிவு மூன்றையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்சென்று ஒதுக்கி விடுங்கள்.
- வஞ்சனையால் எதையும் உலகில் சாதிக்க இயலாது. அன்பும் உண்மையும் இருந்தால் பெரிய செயலைக் கூட எளிதாக செய்து விடலாம்.
- இந்த பரந்த உலகில் பிறந்திருக்கும் நீங்கள், அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால், உங்களுக்கும் சிறு கல்லுக்கும் கூட வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.
- பயமின்மையே வாழ்க்கையின் ரகசியம். பிறரிடம் இருந்து வரும் உதவியை ஏற்க மறுக்கின்ற அந்த கணமே நமக்கு சுதந்திரம் கிடைத்து விடும்.
- நியாயமான கோபம் என்ற ஒன்று எங்கும் கிடையாது. ஏனெனில், அனைத்தையும் சமமாகக் காணத் தவறுவதால் தான் ஒருவருக்கு கோபமே உண்டாகிறது.
- எண்ணங்களுக்கு நாம் உரிமை உடையவர்கள். நல்ல எண்ணங்கள் நம்மை நோக்கி வருவதற்காக உள்ளங்களைத் திறந்து வைக்க வேண்டியது நம் கடமை.

# பாசையூர் சென்.அன்ரனீசை வீழ்த்தியது நாவாந்துறை சென்.மேரிஸ் அணி



யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன. இவற்றுக்குத் தனித்தனியாகச் சுற்றுப் போட்டியானது நடத்தப்படுகின்றது.

ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியொன்று 9 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் அணி மோதியது.

இதில் சென்.மேரிஸ் அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. சென்.மேரிஸ் சார்பாக யுனைட்டன் ஒரு கோலை அடித்ததுடன், மற்றைய கோல் சேம் சைட் கோலாகப் பெறப்பட்டது. (க-26)

# 75வது ஆண்டு கால்பந்தாட்டம் சென்.நீக்கிலஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை, உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன. இவற்றுக்கு தனித்தனியாக சுற்றுப்போட்டியானது நடத்தப்படுகின்றது.

ஏ பிரிவு அணிகளான நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணிக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணிக்கும் இடையிலான போட்டியொன்று 10 ஆம் திகதி நடைபெற்றது. இதில் சென்.நீக்கிலஸ் அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் இலகுவாக வென்றது. (க-26)



மன்னார்-அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையின் 2019 ஆம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்டப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் பாடசாலைக்கு முன் ஆரம்பமானது.

பாடசாலையின் அதிபர் எம்.வை.மாஹிர் குறித்த வீதி ஓட்டப்போட்டியினை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலைக்கு முன் ஆரம்பமான குறித்த போட்டி பிரதான வீதியூடாக சென்று மன்னார் வைத்தியசாலை வீதியை சென்றடைந்தது.

அதனைத்தொடர்ந்து மன்னார் பள்ளிமுனை வீதியூடாகச் சென்று மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்து மீண்டும் பாடசாலையை சென்றடைந்தது.

போட்டியில் முதலாம் இடத்தினை தாஜ் இல்லத்தைச் சேர்ந்த எம்.எம்.எம்.முஜாகிர் மற்றும் 2 ஆம், 3 ஆம் இடங்களை சம்ஸ் இல்லத்தைச் சேர்ந்த வீரர்களாக எம்.எல்.எம்.சல்மான் பாரீஸ் மற்றும் எம்.கே.எம்.வசீம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

# டிப்ளோமா கிண்ண கால்பந்தாட்டம் அரையிறுதியில் திருக்குமரன் அணி

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன. இவற்றுக்கு தனித்தனியாக சுற்றுப் போட்டியானது நடத்தப்படுகின்றது.

இதில் பி பிரிவு அணிகளுக்கிடையிலான காலிறுதியாட்டம் ஒன்று 9 ஆம் திகதி நடைபெற்றது. உரும்பிராய் திருக்குமரன் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதியது. போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை. வெற்றியாளரைத் தீர்மானிக்க நடைபெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் திருக்குமரன் அணி, 03:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (க-26)

# ஸ்ரான்லி கல்லூரியுடனான ஆட்டம் யாழ்.இந்துக் கல்லூரி இலகு வெற்றி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டத்தில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, இனிங்ஸ் மற்றும் 111 ஓட்டங்களால் வென்றது.

இரு பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ ஆட்டம் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, 86 ஓவர்களில் 268 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் தமது ஆட்டத்தை இடைநிறுத்தினர்.

துடுப்பாட்டத்தில் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கோமைந்தன் ஆட்டமிழக்காமல் 151 ஓட்டங்களையும் தனுஸ்ரன் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக டிலக்சன் 3 விக்கெட்டுக்களையும் லஜிந்தன், நிதுசன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்ரான்லி அணி, 36.4 ஓவர்களில் 49 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்து சார்பாக ஜங்கரன் 6 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும்கோமைந்தன், மதுமிலன், கோபிராம் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பலோ ஒன் முறைக்குத் தள்ளப்பட்ட ஸ்ரான்லி கல்லூரி அணி, மீண்டும் இரண்டாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கி, 38.3 ஓவர்களில் 108 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்து, இனிங்ஸ் மற்றும் 111 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் கதிரவன் 28, லஜிந்தன் 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கஜன் 18 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கோபிராம் 41 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (க-26)

# பாணந்துறை சென்.ஜோன்ஸை வென்றது யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் பாணந்துறை சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.



நா.சௌமியன்



மு.அபிநாஸ்

இரண்டு நாட்களைக் கொண்ட ஆட்டமாக சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, 63.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் மேர்பின் அபிநாஸ் 47 ஓட்டங்களையும் நா.சௌமியன் 42, எல்.டெனுசன் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் பாணந்துறை சென்.ஜோன்ஸ் அணி சார்பாக, சசித மனுபிரிய 40 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் தமிந்து நிவரத்ன 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாணந்துறை சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, 56.2 ஓவர்களில் 162 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தமிந்து நிவரத்ன 61 ஓட்டங்களையும் அஸான் டில்ஹர 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக மேர்பின் அபிநாஸ் 51 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் சரண் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

22 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காகத் .துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, 41.4 ஓவர்களில் 129 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் தெய்வேந்திரன் டினோசன் 43, வினோஜன் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் பாணந்துறை சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக, சசித மனுபிரிய 41 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு களமிறங்கிய பாணந்துறை சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, 28.1 ஓவர்களில் 96 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 55 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக மேர்பின் அபிநாஸ் 29 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் சரண் 3 விக்கெட்டுக்களையும் நாகேந்திரராசா சௌமியன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (க-26)

# வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான செயன்முறைப் பயிற்சி

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தமிழ்மொழி மூல வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை பெப்ரவரி 2 ஆம் 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களுக்கான பயிற்சிகள் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமைகாலை 9 மணிக்கு யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது என யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் சி.சுரேந்தினி அறிவித்துள்ளார். (க)

# வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண புதிய அரசியலமைப்பை கொண்டுவரவில்லை

## – தேசிய தேரர்கள் ஒன்றியம்

அரசியல்வாதிகளின் தேவைகளுக் காகவே அன்றி வடக்கு மக்களின் உண் மையான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் உத்தேச புதிய அரசியல் அமைப்பு கொண்டுவரப்படவில்லையென தேசிய தேரர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ் வொன்றில் அந்த ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் பாஹியங்கலை சாகர தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அரசியல் அமைப்பு வரைபு உருவாக்கப் பட்டுவருகின்றது.

விடுதலைப்புலி ஆதரவு தெற்கு மற்றும் வடக்கு கட்சிகளின் தேவைகளையே நிறை வேற்ற முயற்சிக்கின்றனர்.

புலம்பெயர் அமைப்புக்களின் பணத்திற் காக அரசியல் கட்சிகளும் வடக்கில் தமிழ் கட்சிகளும் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

வடக்கு மக்களுக்கும் சமத்துவம் அவசிய மானது. வடக்கிற்கும் சட்டம் நீதியானதாக அமைய வேண்டும்.

தெற்கில் உள்ளவர்கள் எதிர்ப்பார்க்கின்ற விடயங்கள் வடக்கில் உள்ளவர்களுக்கும் கிடைக்கின்றபோது பிரிவினை ஏற்படாது.

தற்போது, வடக்கையும் தெற்கையும் பிளவுபடுத்தி 30 ஆண்டுகால சாபத்தை மீண்டும் ஏற்படுத்த முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## பாராளுமன்றில்...

அரசியலமைப்பு சட்டமூலத்தைத் தயாரிப் பதற்காக வழிநடத்தல் குழுவும் 6 உப குழுக்களும் நியமிக்கப்பட்டன.

வழிநடத்தல் குழு மற்றும் உப குழுவி னால் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை அடிப் படையாகக் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கை நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

சூரி ரத்னபால, ஒஸ்டின் புள்ளே, ஏ.எம். நவரத்ன பண்டார, செல்வக்குமாரன், கும்தா குணரத்ன, கபில பெரேரா, சுரேன் பெர்னாண்டோ, ஹிரான் அன்கடெல், அஷோக குணவர்தன மற்றும் சமிந்த்ரி சபரமாது ஆகியோர் இந்த நிபுணர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங் களுக்கு அமைய, பாராளுமன்றம் மற்றும் இரண்டாம் பிரதிநிதிகள் சபை என இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக சபை அமைய வேண்டும்.

5 வருட பதவிக்காலத்திற்காக 233 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய் யப்பட வேண்டும் என்பதுடன், இரண்டாம் உறுப்பினர் சபை 55 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் தொகுதிகளூடாக 140 உறுப் பினர்கள் தெரிவாவதுடன், மேலும் 76 பேரைத் தெரிவு செய்வதற்கான அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண் டும்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பது டன், அரசாங்கம் மற்றும் முப்படைகளின் தலைவரான ஜனாதிபதி பாராளுமன்றத் திற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

ஜனாதிபதியை நியமிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்படுவதுடன், பாராளுமன்றம் மற்றும் இரண்டாம் பிரதி நிதிகள் சபை உறுப்பினர்களின் அரை வாசிக்குக் குறையாத வாக்குகளால் ஜனாதி பதி தெரிவு செய்யப்படல் வேண்டும்.

பதவியை பொறுப்பேற்றதன் பின்னர் ஜனாதிபதி கட்சி அரசியலில் ஈடுபட முடியாது என்பதுடன், சுயாதீனமாக செயற்பட வேண் டும்.

அடிப்படை உரிமை மற்றும் ரிட் கட்ட ளைச்சட்டம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எதி ராக நீதிமன்றத்தை நாடுவதற்கு இயலும் என நேற்று சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப் படும் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும்.

கூட்டாக பாராளுமன்றத்திற்குப் பொறுப் புக் கூறும் அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை நம்பிக்கையை பெறக்கூடிய வர் என தாம் கருதுபவரை ஜனாதிபதி பிரத மராக நியமிக்க வேண்டும்.

ஏதேனுமொரு கட்சி பாராளுமன்றத்தில் அரைவாசிக்கும் மேலாக ஆசனங்களைக் கைப்பற்றுதல், தேர்தலில் போட்டியிடும் போதே பிரதமர் வேட்பாளரை பெயரிடல் வேண்டும். பிரதமர் வேட்பாளர் பாராளு மன்ற உறுப்பினராக இருக்கும் பட்சத்தில், மீண்டும் பாராளுமன்றத்தில் பெரும்பான் மையை நிரூபிக்க வேண்டிய அவசிய மில்லை.

அடுத்த தேர்தல் நடத்தப்பட்டு புதிய பிரதமர் நியமிக்கப்படும் வரை, அவ்வாறு நியமிக்கப்படும் பிரதமர் அந்தப் பதவியை வகிக்க முடியும்.

அமைச்சரவை உறுப்பினர்களின் எண் ணிக்கை முப்பதைவிட அதிகரிக்கக்கூடாது என்பதுடன், அமைச்சரவைய்யின் தலை வராக பிரதமர் செயற்பட வேண்டும்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச் சர்களின் எண்ணிக்கை, அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை, விடயப் பரப்புக்களை தீர்மானிக்கும் அதிகாரம் பிரதமருக்குரியதாகும்.

மாகாணத்தில் நடத்தப்படும் மக்கள் தீர்ப்பின் பின்னர் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் சட்டமூடாக, இரண்டு அல்லது மூன்று மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாக பிரகடனப்படுத்த முடியும் என மாகாண சபைகள் தொடர்பில் குறிப் பிடப்படும் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைத்தவிர, மேலும் பல்வேறுபட்ட விடயங்கள் இந்த ஆவணத்தில் உள்வாங் கப்பட்டுள்ளதுடன், அரசியல் கட்சி மற்றும் நிபுணர் குழுக்களின் ஆவணங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம-3)

## நாடு முழுவதும்...

இணைந்து அனைத்து அரச துறைகளை யும் ஒன்றிணைத்த வேலைத்திட்ட மொன்றை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள் ளன.

போதைப்பொருள் ஒழிப்பை மாண வர்களின் மூலம் கற்றுக்கொள்வோம் என்ற தொனிப்பொருளின் கீழ் பாடசாலை மாண வர்களையும் பெற்றோர்களையும் இலக் காகக் கொண்டு பல்வேறு வேலைத் திட்டங் களை முன்னெடுப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக கல்வி துறை சார்ந்த அதிகாரிகள், அதிபர்களை தெளிவூட்டு வதற்கான அனைத்து ஆலோசனைகளும் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

"போதைப்பொருள் ஒழிப்பை வாழ்க் கையில் பழக்கமாக முன்னெடுக்க வேண் டும். போதைப்பொருளுக்கு மாணவர்கள் அடிமையாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது சமூக அழிவுக்கு உந்து சக்தியாக அமையும். ஆகவே இந்த விவகாரம் மிக வும் பாரதூரமானது. சுற்று வட்ட சமூக சூழல் மாணவர்களை போதைப்பொருளுக்கு அடிமையாக்கின்றது.

ஆகவே இந்த விவகாரம் தொடர்பாக மாணவர்களை தெளிவூட்டுவது மட்டு மன்றி அதற்கான செயற்றிறன்மிக்க வேலைத் திட்டங்கள் அவசியம்" என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். (ம-3)

## பொதுத் தேர்த...

ட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், புதிய அரசியலமைப்பு அனைத்து மக்களை யும் ஒன்றுசேர்க்கும்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசியலமைப்பு நிறைவேற்றப்பட வேண்டும். அதன் பின்னர் மக்கள் கருத்துக்கணிப்புக்கு செல்ல வேண் டும். ஆனால் பொதுத் தேர்தல் அவசிய மில்லை.

அரசியலமைப்பை ஏற்க முடியுமா என் பதை மூவின மக்களும் தீர்மானிக்கட்டும். அதற்கும் தேர்தலுக்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்தார். (ம-3)

## அரசமைப்பு...

வைத்து உரையாற்றும்போதே, அவர் மேற கண்டவாறு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், இனவாதத்தைத் தூண்டவேண்டாம் என் றும் குரோதத்தை விதைக்க வேண்டா மென, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ஷ, கூறியதை நினைவுபடுத்தியதோடு ஆனால், மகிந்தவும் அவரது சகாக்களுமே, விகாரைவிகா ரையாகச் சென்று, மக்களைக் குழப்பும் வகையில் இனவாதக் கோணத்தில் பரப்பு ரைகளை முன்னெடுத்து வருகின்றன ரெனக் குற்றஞ்சாட்டினார்.

ஏப்ரல் மாதத்துக்குள் நாடு பிளவுபடும், சமஷ்டி அரசமைப்பு உருவாகும், 09 பொலிஸ் நிலையங்கள் உருவாகும் என்றெல்லாம், மகிந்த தரப்பினர் அறிவிப்புகளை விடுத்து வருவதாகக் கூறிய அநுரகுமார எம்.பி, 10 வருடங்கள் ஜனாதிபதிப் பதவியை வகித்த ஒருவர் கூட, புதிய அரசமைப்பு தொடர்பில் போலி கருத்துகளை முன்வைத்து வரு கின்றாரெனவும் கூறினார்.

"கிராமமொன்றுக்குச் சென்று பொய் யுரைத்தால் கூட பரவாயில்லை. ஆனால், விகாரை விகாரையாகச் சென்று, வழிபாடு களில் ஈடுபட்டு - பிரித் நூல்களை கட்டியப் படி, புத்தபெருமானின் முன்னிலையிலேயே பொய்யுரைக்கின்றனர். இது தகுமா? புதிய அரசமைப்பு ஊடாக, நாடு பிளவுபடாது. அதற்கு ஜே.வி.பி. இடமும் அளிக்காது.

"அரசமைப்பு யோசனைக்கு நாடாளுமன் றத்தில் மூன்றிலிரண்டுப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால், அதன்பிறகு ஓர் அடி யேனும் முன்வைக்க முடியாது. எனவே, வீண பரப்புரைகளை முன்வைக்க வேண்டாம்" என, அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## புதிய அரசியல...

புதிய அரசியல் அமைப்புக்கான அனை வரது கருத்துக்கும் சபையில் சகலரும் இணக்கம் தெரிவித்தால் வழிநடத்தல் குழு அடுத்த கட்ட நடவடிக்கையை எடுப்போம். இதில் இணக்கம் இல்லாது போனால் அதற்கு அப்பால் எம்மால் எதனையும் செய்ய இய லாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அங்கு இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த பிரதமர்,

புதிய அரசியல் அமைப்பினை கொண்டு வந்து பௌத்தத்தை அழிக்கின்றோம், நாட்டினை பிளவுபடுத்துகின்றோம், வடக்கு கிழக்கை இணைக்கின்றோம் என்ற கருத் துக்களை அண்மைக்காலமாக எதிரணி யினர் கூறி புதிய அரசியல் அமைப்பினை எதிர்த்து வந்தனர்.

ஆனால் இன்று முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் அவை ஒன்றுமே இல்லை. சகலரதும் கருத்துக்களை சபையில் முன் வைத்துவிட்டோம்.

இபபோது சபை தீர்மானம் எடுக்க வேண டும். அரசாங்கமாக எமது கடமையை நாம் நிறைவேற்றி விட்டோம். இப்போது சபை யில் இது குறித்து இணக்கம் காணப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## நாவற்குழி மகா...

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை மாணவர் குழு ஒன்று தாக்க முற்பட்டதால் நேற்று அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட் டது.

இதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யக்கோரி பாடசாலை சமூகத் தால் நேற்று நண்பகல் பாடசாலை முன்ற லில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட் டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

குறித்த பாடசாலையில் கல்விகற்கும் சில மாணவர்கள் பாடசாலையின் ஒழுக்க விதிகளை மீறியும் ஏனைய மாணவர்களை அச்சுறுத்தும் விதத்திலும் தொடர்ச்சியாக செயற்பட்டு வந்துள்ளனர்.

இம்மாணவர்களை ஏற்கெனவே கண் டித்த ஆசிரியர்களை இவர்கள் அச்சுறுத்திய தால் அவர்களில் சிலர் மாற்றலாகியும் சென் றுள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் தெரி வித்தன.

இந்நிலையில் குறிப்பிட்ட மாணவர்களை பாடசாலையில் ஒழுக்கமாகவும் பாடசாலை யின் கௌரவத்தினை பேணும் வகையில் நடந்துகொள்ளுமாறு அதிபர் அறிவுறுத்தி யுள்ளார். இதனால் குறித்த மாணவர்கள் பாடசாலை மாணவர்கள் அல்லாத வெளி யாட்களோடு இணைந்து நேற்று பாட சாலைக்குள் நுழைந்து அதிபர் மற்றும் ஆசிரியர்களை தாக்க முற்பட்டுள்ளதாகவும்,

இதன்போது பாடசாலையின் மாண வர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒன்றுதிரண்டு மூன்று பேரைப் பிடித்து சாவகச்சேரி பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இவர்களில் இரண்டு மாணவர்களும் உள்ளடங்கு கின்றதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவத்தையடுத்து பாடசாலைக்கு முன்பாக ஒன்றுதிரண்ட மாணவர்கள் தமது பாதுகாப்பையும் அதிபர், ஆசிரியர் களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக் கோரியும் ஒழுக்கமற்ற மாணவர்களை பாட சாலையில் இருந்து விலக்குமாறு கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நாவற்குழி பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து தென்மராட்சி வல யக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களோடு பேச்சு நடத்தினர்.

இதன்போது இன்று பாடசாலை சமூகம், பழைய மாணவர்கள், பாடசாலை அபி விருத்தி சங்கம், வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் பொலிஸார் ஆகியோர், இணைந்து தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டு ஆசிரியர் மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படும் என உறுதியளித்ததை தொடர்ந்து மாணவர்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

பாடசாலை மாணவர்களின் இந்த போராட்டத்திற்கு பழைய மாணவர்கள், கிராம மக்கள் என பலரும் ஆதரவு தெரி வித்திருந்தனர். (ம-9,89)

கொவிசெத
திகதி 2019.01.11
சீட்டிழுப்பு இலக்கம் 2001
ஆங்கில எழுத்து B வெல்லப்பட்ட இலக்கங்கள் 25 37 67 71
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/01/11
சீட்டிழுப்பு இலக்கம் 3831
ஆங்கில எழுத்து D வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 3 0 0 1 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-01-11
சீட்டிழுப்பு இலக்கம் 100
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 43 58 61 67
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/01/2019
சீட்டிழுப்பு இலக்கம் 330
வெற்றி எழுத்து Q சுப்பர் இலக்கம் 02 வெற்றி இலக்கங்கள் 01 31 44 68
தேசிய லொத்தர் சபை

**JV Language Centre**

**Deutsch**

புதிய வகுப்புகள் ஆரம்பம்,
மந்திகை in சிலையடி
கிளிநொச்சி.
சாவகச்சேரி.

**T.Nanthan**
077 078 2022, 076 689 0473
(C-5094)

## வீடு விற்பனைக்கு

காட்டுப்புலம் (தொண்டைமானாறு) வல்வெட்டித்துறையில் கே.கே.எஸ் வீதியில் 11/2 பரப்பு காணியில் அமைந்துள்ள 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு.

தொடர்பு: 0774117632 (C-5124)
whatsapp or Viber: 00447828786415

## O/L உடன் 6 மாத பயிற்சி பெற்று

டுபாய், குவைத், ஓமான், சுவிஸ், நியூசிலாந்து, மலேசியா, அவுஸ்ரேலியா, கனடாவில்
ரூ.70,000 முதல் ரூ.2 இல. க்குமேல்
சம்பளத்துடனான வேலைவாய்ப்புடன்...

TOURISM & Hospitality Management
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்
ஆரம்பம் ஜன. 16
ஹொட்டேல் தொழில்துறைப் பயிற்சி
FREE ENGLISH for COMMUNICATION
021 222 00 11, 077 36 16 798, 0777 324 004
No.1 Award Winning Institute of the North
10 வது ஆண்டில் கால் பதிக்கும்
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
Sri Lankan Entrepreneur of the Year 2017
10க்கு மேற்பட்ட அணிகள் - 100க் கணக்கான மாணவர்கள்
(C-5098)
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.sikaram.lk Sikaram Academy

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
(C-5112)
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## குவைத் வேலைவாய்ப்பு

மோட்டார் சைக்கிள் டிலிவரி ஆட்கள்
(இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது)
மோ. சைக்கிள் மெக்கானிக்
கார் சாரதி
(மத்தியகிழக்கு சாரதி அனுமதிப்பத்திரம்)
உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து, மருத்துவ ஏற்பாடுகள் கம்பனியினால் வழங்கப்படும்.
ஆரம்ப கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ.200
சம்பளம் ரூ. 71,640/-
077 00 38 215
021 221 9 221
(C-5098)
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
221-1/1
மின்சார நிலைய வீதி
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

## Architectural CAD Centre

Personal - Group - Visiting Classes
Jaffna - Vavuniya - Colombo
Diploma in Engineering Drawing &

**Auto CAD**

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD (Software (2D &3D))
University of Peratheniya
Cert. in Auto CAD (Advance 3D - Modeling)
University of Moratuwa
Contact No:0718617972

## கூட்டமைப்பு பின்...

அரசியலமைப்பு உருவாக்கத்தில் உள்ள பிரதான தமிழ்க் கட்சி என்ற அடிப்படையில் கூட்டமைப்பு விளங்குவதாகவும், இந்நாட்டின் அரசியலமைப்பு அனைவரது ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்டது என்ற அடிப்படையில் தமது பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டு பிரதான தரப்புகளும் இதனை உணர்ந்துகொள்ள வேண்டும் என்றும், இந்த பொன்னான தருணத்தை இழந்து விடக் கூடாது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, குறித்த அறிக்கைகள் மூன்று மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்றும் சபையை வலியுறுத்தினார்.(ம-3)

## பாடசாலைகளுக்...

லாளருக்கு வழங்கியுள்ளார்.

இதுதொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனவரி 15ஆம் திகதி செவ்வாய்கிழமை கொண்டாடப்படும் தமிழர்களின் பண்டிகையான தைப் பொங்கலை முன்னிட்டு 14ஆம் திகதி திங்கட்கிழமை வடக்கு மாகாணத்தின் பாடசாலைகளுக்கு விடுமுறையினை வழங்குவதற்கான உத்தரவினை வழங்கியுள்ளதாகவும், இந்த விடுமுறைக்கான மாற்றுப் பாடசாலை தினம் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-9)

## பாரா...

யதாக இந்த இடைக்கால வரைபு அமைந்துள்ளது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக பாராளுமன்றம் நேற்று முற்பகல் அரசியலமைப்புசபையாகக்கூடியது.

அரசியலமைப்பு சட்ட வரையைத் தயாரிப்பதற்காக வழிநடத்தல் குழுவும் 6 உபகுழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. (ம-3)

## சிங்களம் ஆங்கிலம்

Spoken English
Spoken Sinhala
English Sinhala diploma வகுப்புகள்.
- உங்களுக்கு வசதியான நேரங்களில்...
- அனைத்து வயதினருக்குமானது.
- Writing, Listening, Speaking, Reading ....

British College of Higher Studies
No.15, Sirambiyadi lane, Off Stanley road, Jaffna.
021 222 4550/ 076 138 0212
(C-5128)

## கடை விற்பனைக்குண்டு

மானிப்பாய் றவுண்ட்போட் சந்தியில் மருந்துக்கடை, புடவைக்கடை, நகைக்கடை இவை மூன்றும் நடத்தக்கூடிய வகையில் சகல வசதிகளுடன் இருக்கிறது. Viber- 0016478919714
தொடர்புகளுக்கு :
0761119180, 0756434535
(7119)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## 2019-ம் ஆண்டிற்கான வேவைாய்ப்பு திட்டம்

EPT நிறுவனத்தால் உங்களுக்கு அரியதொரு வாய்ப்பு. நீங்கள் 10ம் தரம்,O/L,A/L படித்தவராயின் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.
முதலாம் மாதம் 15,000/= சம்பளத்தினையும் இரண்டு மாத அனுபவத்தின் பின்னர் 25,000/= வருமானத்தினையும் மூன்று மாத அனுபவத்தின் பின்னர் 30,000/= வருமானத்தினையும் பெற்றுக் கொள்ளலாம்.
அனுபவத்தின் பின்னர் உங்கள் வசிப்பிடத்திற்கு அருகாமையில் நிரந்தர வேலையினையும் 40,000 அடிப்படைச் சம்பளத்தினையும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிக்க விரும்புகின்றவர்கள் உங்களுடைய பெயர், தே.அ.அ.இல என்பவற்றை இவ் இலக்கத்திற்கு SMS செய்யவும். SMS- 0775179034
மேலதிக விபரத்திற்கு : 0779858580
(6693)

## வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி நகரின் மத்தியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு மாடி பெரிய வீடு வாடகைக்கு உண்டு.
குடியிருப்பதற்கும் அலுவலகப்பாவனைக்கும் மிகவும் உகந்தது. கிளிநொச்சி கச்சேரி, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, வங்கிகள், ரயில்வே ஸ்ரேசன்,பஸ்,சந்தை,பொலிஸ் நிலையம் எல்லாம் 10 நிமிடத்திற்கு குறைவான நடை தூரத்தில் உள்ளது.
தொடர்புகளுக்கு:
அருள் - 0772623711
(C-5129)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

எதிர்வரும் 26-ம் திகதி நடைபெற உள்ள
வட மாகாண அலுவலக பணியாளர் பரீட்சைக்கான இறுதிக் கருத்தரங்கு
இன்றும் நாளையும் 9.30 மணிக்கு
கோலாசிற்றி
234,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0778435224

## Techno World

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்.
0770175346

A/L 2018 தொழில்நுட்பபிரிவில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லும் 68 மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.

அனைத்து மாவட்டங்களிலும் முதலிடம் Techno World மாணவர்களே....!

உயிர்முறை தொழில்நுட்பம்

| பெயர் | மாவட்டநிலை |
|---|---|
| கலக்சிகா | 01 (யாழ்ப்பாணம்) |
| ரஜிதா | 01 (முல்லைத்தீவு) |
| விதுர்சன் | 01 (கிளிநொச்சி) |

உயிர்முறைமை தொழில்நுட்பம்

தனுசியன் - 03
ரினுயா - 04
கிரிஜனா - 05
கிசோரகா - 06
அசமா பானு - 07
கம்சிகா - 07
நளாயினி - 07
நிலலன் - 08
கஜானி - 09
சகன்யா - 11
ஜெனிற்றா - 11
டனுசிகா - 11
நிசாந்தினி - 11
கேசங்கா - 12
சலாகி - 12
யதுர்சன் - 13
வேணுயன் - 15
கிசானிகா - 17
சாருகா - 18
சாரிகா - 18
பரணிகா - 20
ஜிந்துசா - 20
கலக்சன் - 22
ருத்திகா - 21
கிருஸ்திகா - 23
டர்சிகா - 24
சதுர்ஜனா - 29
பவிக்சன் - 25
நிலாஜினி - 28
கைசிகா 30
லவன் - 32
ஜெயசித்ரா - 33
கிறிஸ்றி திவ்யா - 33
பயிசாளினி - 36
நிலவழகன் - 38
தமிழரசி - 39
தரங்கிதா - 42
பிரவீனா - 42
வினோதா - 45
பூர்விகா - 52
ராஜஜி - 55
தசாரா - 51

பொறியியல் தொழில்நுட்பம்

விசுராதன் - 04
டக்சன் - 06
நதுர்ஷன் முகமட் சர்வீன் - 06
வேணுயன் - 08
திவாகர் - 09
போல் யேசுரட்ணம் - 10
துஜீவன் - 13
தமிழினியன் - 21
ஜிந்துசன் - 25
ஜனிஸ்ரன் - 27
கோகுலன் - 29
கஜந்தன் - 34
துசியந்தன் - 35
டிலக்சன் - 41
விஜித் - 43
கொவின் - 46
ஜோன் கில்டன் - 52
நதுர்சாயினி - 56

(C-5131)

தொழில்நுட்ப பிரிவில் இவ்வருடம் அதிகளவு மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு தனியார் கல்வி நிலையம்

A/L 2021,2019,Day Class
புதியபிரிவு : 13/01/2019 9.00am

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.